விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
.valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 24 வியாழக்கிழமை (08.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 079

சொல்லாடல் - 2018
கொழும்பு இந்துக் கல்லூரி எதிர்
யாழ். இந்துக் கல்லூரி பங்கு
பற்றும் இந்துக்களின்
மாபெரும் விவாதச் சமர்
காலம் : நாளை 09.03.2018 வெள்ளி
நேரம் : மாலை 6.30 மணி
இடம் : யாழ்.இந்துக் கல்லூரி
சபாலிங்கம் அரங்கு

## அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையிலும்

# கண்டியில் வன்முறை தொடர்கிறது!



சமூக வலைத்தளங்கள் முடக்கம்!

- மக்களை வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என அறிவிப்பு.
- மறு அறிவித்தல்வரை மீண்டும் ஊரடங்குச்சட்டம்.
- பொலிஸாரின் சகல விடுமுறைகளும் இரத்து.
- மறு அறிவித்தல் வரை கண்டி பாடசாலைகள் மூடப்படுகின்றன.

(கண்டி) அவசர காலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் கண்டி மாவட்டத்தின் சில பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அக்குரண 8-வது மைல் கல், கட்டுகஸ்தோட்ட பகுதிகளில் முஸ்லிம்களின் 25ற்கும் மேற்பட்ட கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. (23-ம் பக்கம்...)

## இனங்களுக்கிடையிலான வன்முறை கவலை தருகின்றது : ஐ.நா அறிக்கை

### நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தி மனித உரிமைகளையும் அனைவருக்குமான பாதுகாப்பையும் உறுதி செய்யுமாறு அதிகாரத் தரப்பினரை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள ஐ.நா 24

### பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து

## பாதுகாப்பு அளிக்கும் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டவரைபு மீதான விவாதம் கடந்த ஆண்டு ஜூலை 5ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு பிற்போட 23

## யாழ். இந்தியத் துணை தூதுவராக எஸ்.பாலச்சந்திரன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவராக ஆந்திராவைச் சேர்ந்த எஸ்.பாலச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று மாலை அவர் பதவியேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியத் துணைத் தூதுவராக கடமையாற்றிய ஆ.நடராஜன் இன்று காலை டில்லி செல்லவுள்ளார்.

புதிதாக நியமனம் செய் 23

## கண்டி பூஜாப்பிட்டிய பிரதேசத்தில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி

### பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுப்பு

(கண்டி)

கண்டி - பூஜாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை பகல் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிடுகின்றது.

எனினும் இந்த சம்பவத்திற்கும் அண்மைய நாட்களில் 23

### அமெரிக்கவாசி

## கிளிநொச்சியில் அடித்துக் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள செல்வாநகர் கிராமத்தில் இனம் தெரியாத மர்ம நபர்களால் தாக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வந்த அமெரிக்காவில் வசிக்கும் புலம்பெயர் 24

### சாவகச்சேரி பஸ் நிலைய

## மலசலகூடத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு பின்புறமாக அமைந்திருந்த மலசலகூடத்தினுள் இருந்து நேற்று காலை உருக்குலைந்த நிலையில் சிசு ஒன்றின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று காலை குறித்த மலசலகூட பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. அப்பகுதிக்கு 24

## கட்டுப்பாட்டை இழந்த கார் மரத்துடன் மோதி விபத்து

### கரவெட்டியை சேர்ந்த வைத்தியர் உயிரிழப்பு

(மல்லாவி)

முழங்காவில் பொலிஸ் நிலையப் பிரிவில் (ஏ32) யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் உள்ள மண்டக்கல்லாறு பகுதிக்கு அண்மையாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதியின் அருகே நின்ற மரத்துடன் மோதுண்டு விபத்துக் 24



## வட்டுக்கோட்டையில் 75 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இருந்து 75 கிலோ கேரள 24

### வெளிமாவட்டங்களிலிருந்து வந்த

## அரசியல் சார்ந்த குழுவினரே திட்டமிட்டு தாக்குதல்களை நடத்தியுள்ளனர்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

திகன தெல்தெனிய உள்ளிட்ட கண்டி மாவட்டத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து வந்த அரசியல் சார்ந்த குழுவினர் திட்டமிட்ட ரீதியில் மேற்கொண்ட சதி நடவடிக்கையினாலேயே அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. இது தொட 23



### கொழும்பு பகுதியில்

## உடல் இல்லாமல் தலை மீட்பு

(கொழும்பு)

கொழும்பு - வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க மாவத்த பகுதியில் துண்டிக்கப்பட்ட நிலையில் ஒருவரின் தலை மீட்கப்பட்டுள்ளது.

நேற்று காலை குறித்த தலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

24

# விபத்தில் சிக்கிய பாலகன் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(கரணவாய்)

விபத்தில் சிக்கிய 2 1/2 வயதுப் பாலகன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் புலோலி சாரையடிப் பகுதியில் இவ்விபத்து ஏற்பட்டது.

புத்தூரில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த ஹயஸ் வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வீதிக்கு அருகில் இருந்த மதில் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் தாய், தந்தையர்களிற்கு எவ்வித காயமும் இல்லாத நிலையில் அவர்களின் பிள்ளையான புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அருள் நேஸ்வரன் அனுசன் (வயது-2 1/2) என்ற பாலகன் தலையில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பப்பட்ட நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அருகில் பாலகன மூச்சு விடச் சிரமப்பட்டதையடுத்து அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது பாலகன் உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர். (ம-60)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் (கலட்டிச் சந்திக்கு அருகில்) இயங்கும் மிருக வைத்திய சத்திரசிகிச்சை நிலையத்திற்கு பெண் உதவியாளர் உடன் தேவை. (3159)

**தொடர்பு:0772639573**


## யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம் 200ஆவது ஆண்டு விழா

எமது பாடசாலை ஆரம்பித்து 04.06.2018இல் இருநூறு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. இவ் இருநூறாவது ஆண்டை முன்னிட்டு விழா ஒன்றை 04.06.2018 அன்று கொண்டாடத் தீர்மானித்திருப்பதால் இவ் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கான கூட்டம் 18.03.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தில் (தற்காலிக முகவரி-சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்)-வாழ்வகம் மற்றும் CANE புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடையில்) நடைபெறவிருப்பதால் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்: பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.**
**தொடர்பு கொள்வதற்கான**
**தொ.பே.இல:-0212241756, 0779834893**
(3157)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
**தனுசன் கமலேஸ்வரி**
பிறப்பு:09.02.1994
இறப்பு:07.02.2018
அவர்களின் 31ஆம் நினைவுநாள் இன்று 08.03.2018இல் நடைபெறும்.

வைரவர் கோவிலடி,
கரணவாய் வடக்கு,
நவிண்டில். (C-1815) -குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

## கந்தசாமி மோகனசுந்தரம் (மோகன்)

(கப்பூது வீரகத்தி பிள்ளையார் ஆலய தலைவரும், கப்பூது விவசாய சம்மேளன செயலாளரும், கிராம முன்னேற்ற சங்கத் தலைவரும், சமூகத் தொண்டனும்)



கப்பூதுவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மோகனசுந்தரம் (மோகன்) அவர்கள் (07.03.2018) நேற்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சிவகாமி ஆகியோரின் புத்திரனும், அமரர் செல்லையா மற்றும் தங்கமணி ஆகியோரின் மருமகனும், சிவகாந்தியின் அன்புக் கணவரும், விதுஷா, தர்ஷன், தனுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளநாயகி, சரஸ்வதி, லீலாவதி, நிர்மலாதேவி, அருணகிரிநாதன் (சரண்யா மில்-கரணவாய்), ஆலாலசுந்தரம் ஆகியோரின் அன்பு சகோதரனும், நடராசா, சிவபாதசுந்தரம், விஜயகுமார், சிவஞானம், நேசமலர், சோமேஸ்வரி, சிறிகாந்தன் (எவறஸ்ட் உணவகம்-நெல்லியடி), ஜெயகாந்தன், சிவகாந்தன், விஜயகாந்தன் (ஆதீஸ் பேக்கரி-கரணவாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.03.2018 இன்று காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கப்பூது இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கப்பூது, கரவெட்டி.** (சி-1818) **தகவல்:குடும்பத்தினர்** T.P:0777162904

## கண்ணீர் அஞ்சலி

வட மாகாண மருத்துவர் மன்ற ஆரம்பகால உறுப்பினரும் மன்னார் மாவட்ட இணைப்பாளரும் மருத்துவர் மன்றம் ஆரம்பித்த காலம் முதல் தனது கடின உழைப்பின் மூலம் வட மாகாண மக்களுக்கு சிறந்த சேவையாற்றியவருமாகிய



## வைத்திய கலாநிதி கந்தசாமி அரவிந்தன்

**(பிராந்திய வைத்திய அதிகாரி, மலேரியா கட்டுப்பாட்டு இயக்கம் மன்னார் மாவட்டம்)**

அவர்கள் 07.03.2018 நேற்று அகால மரணமடைந்துவிட்டார். அன்னாரின் மரணச்செய்தி அறிந்து அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அடைகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**வட மாகாண மருத்துவர் மன்ற உறுப்பினர்கள்** (சி-1819)

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

கடந்த 09.02.2018 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவன்

அமரர் **இராசேந்திரம் புவன்ராஜ்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 09.03.2018 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (3158)

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைவாணி மில் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.** **இங்ஙனம் குடும்பத்தினர்**

# தமிழின அழிப்பிற்கு இலங்கை அரசை பொறுப்புக்கூற வைத்திருந்தால் வன்முறைகள் தொடர்ந்திருக்காது



## சிங்கள தேசத்தின் திட்டத்தை முஸ்லிம் தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்—கஜேந்திரகுமார் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டும் என்ற சிங்கள தேசத்தின் கோசத்தின் எதிரொலியாகவே முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. பலம் மிக்க இனமாக வளர்ந்து கொண்ட தமிழர் தேசம் தமக்கு போட்டியாக வந்து விடக் கூடாது என்பதாலேயே தமிழர்கள் குறிவைக்கப்பட்டார்கள். தற்போது முஸ்லிம்கள் குறிவைக்க்ப்படுகின்றார்கள். சிங்கள தேசத்திற்கு அச்சுறுத்தலாக எந்த இனம் உருவெடுத்தாலும் சிங்கள தேசம் அவர்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசனின் பத்தாம் ஆண்டு நினைவு தினம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நெல்லியடியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்காக மாமனிதர் கிட்டினன் சிவநேசன் செயற்பட்டமையால் தான் அவர் இலங்கை அரசால் குறிவைக்கப்பட்டார். அவ்வாறு அவர் குறிவைக்கப் படலாம் என்றால், அவரை ஒரு பயங்கரவாதியாக சித்திரித்து கொச்சைப்படுத்தலாம் என்றால் இந்த நாட்டினுடைய தன்மையை உலகம் விளங்கிக் கொள்ள வேண்டும். இன்று பத்து வருடத்திற்கு பின்னர் அவர் கொல்லப்பட்டமைக்கான நீதியைக் கோரி இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம்.

தமிழினத்தை பொறுத்தவரையில் கடந்த 70 வருடங்களாக நீதியைக் கோரி வருகின்றோம். தமிழினம் அகிம்சை வழியில் போராடிய போது பழிவாங்கப்பட்டது. இவ்வாறு தொடர்ந்தும் பழிவாங்கப்பட முடியாது என்பதால் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய போது அப்போதும் ஒரு இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டோம்.

இவை அனைத்துமே நடந்து கொண்டிருக்க தமிழ் மக்களோடு சேராமல் நடுநிலை வகித்த, அல்லது அரசோடு சேர்ந்து அரசு செய்த அநியாயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய முஸ்லிம் தலைவர்கள் கடந்த காலங்களில் செயற்பட்டனர்.

எந்த ஒரு இடத்திலும் சிங்கள பௌத்த தேசியவாதத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் இந்த முஸ்லிம் தலைவர்கள் செயற்படவில்லை. தமிழ்த் தலைவர்கள் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகச் செயற்பட்ட போதும், முஸ்லிம் தலைவர்கள் செயற்படவில்லை. மிகத் தெளிவாக நாங்கள் செயற்பட்டோம்.

அந்த வகையில் மாமனிதர் சிவநேசன் போன்றவர்கள் கொல்லப்பட்டார்கள். இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டோம். ஆனால் முஸ்லிம் மக்கள் செயற்படவில்லை. இலங்கை அரசுடைய அந்தஸ்தை கேள்விக்கு உட்படுத்தவில்லை. முஸ்லிம் தலைவர்களும் செயற்படவில்லை. அதேபோல் மக்களும் செயற்படவில்லை. சிங்கள தேசியவாதத்திற்கு அச்சுறுத்தலாக செயற்படவில்லை. இன்று அந்த மக்கள் திட்டமிட்டு குறி வைக்கப்படுகின்றார்கள்.

நாங்கள் உரிமை கேட்டதால் எம்மை சிங்களம் அளித்தது. ஆனால் முஸ்லிம் மக்கள் இலங்கை ஒரு நாடு என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கிறார்கள். இந்த நிலையில் சிங்கள அரசு அவர்களைத் திட்டமிட்ட வகையில் குறிவைக்கிறது. எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் இல்லாத நிலையில் சிங்கள பௌத்த தேசியவாதம் எல்லைகளை மீறி செயற்பட்டு வருகின்றது.

இது பௌத்த நாடு என்பதற்காகவே வெறி பிடித்து சிங்கள தேசம் இந்தக் கலவரங்களை அரங்கேற்றி வருகின்றது. ஒட்டுமொத்த மக்களையும் முள்ளிவாய்க்காலில் அழித்தது சிங்கள தேசியவாதம் அல்ல, அது இனவாதம். இதே காரணத்தினால் தான் மாமனிதர் சிவநேசனும் கொல்லப்பட்டார். இந்த நாடு தங்களுக்கு மட்டும் தான் வேறு இனங்கள் வளர்ந்து விடக்கூடாது என்பதில் சிங்கள தேசம் உறுதியாக இருக்கின்றது. முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு இலங்கை அரசை பொறுப்புக் கூற வைத்திருந்தால்,

இன்று முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. இந்த வன்முறைகளுக்கு இலங்கை அரசு மட்டுமல்ல, சர்வதேசமும் தான் பொறுப்புக் கூற வேண்டும்.

மேலும் எமது சகோதரர்கள் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக செயற்படவில்லை என்பதற்காக, ஒட்டுமொத்த இனத்துக்கு எதிராக நாங்கள் செயற் படக் கூடாது, தமிழ்த்தேசியம் இனவாதம் அல்ல, இதனை விளங்கிக் கொள்ளாவிட்டால் இவ்வாறான மாவீரர்களுக்கு நாங்கள் செய்யும் துரோகமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-60)

# போர்க் குற்றங்கள் தொடர்பாக துரிதமாக விசாரிக்க வேண்டும்

## பிரிட்டோ பெர்னாண்டோ வலியுறுத்து



(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான செயலகத்தின் ஊடாக போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காணாமல் போனவர்களின் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

காணாமல் போனோரின் உறவினர்கள் தமக்கு நியாயம் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், அரசாங்கம் விசாரணைகளை தாமதித்து வருவதாக காணாமல் போனவர்களின் குடும்பங்களின் ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நிலையில், தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணாமல் போனோர் தொட ர்பான செயலகத்தின் ஊடாக விசாரணைகளை துரிதப் படுத்தி, பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே காணாமல் போனோர் தொடர்பான செயலகத்தை ஸ்தாபித்துள்ளதன் மூலம் படையினரை போர்க் குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல தயாராகி வருவதாகவும் இதனால், அந்த செயலகத்தை தாம் எதிர்ப்பதாக தேசப்பற்றுள்ள தொழில் நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# முடங்கியது பேஸ்புக், வட்ஸ் அப்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு கண்டி மாவட்டம் உட்பட நாட்டின் சில முக்கிய இடங்களில் தொலைபேசிகளினூடான இணையபாவனைகளும் வலையமைப்பு சேவைகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலதிக அறிவிப்பு வரும் வரைகுறித்த இணையசேவைகள் இடைநிறுத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் முற்றாக பேஸ்புக் ஐ அரசாங்கம் தடை செய்துள்ளது.

நாட்டின் கண்டி, தெல்தெனிய, பல்லேகல உள்ளிட்ட பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் நேற்று முன்தினம் பகல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும் நேற்று முன்தினம் இரவு வேளையில் ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில் மீண்டும் தாக்குதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

கண்டியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதோடு கண்டி நிர்வாக மாவட்டத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் விடுக்கும் வரை அமுலில் இருக்குமென பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அத்தோடு, பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மூன்று விசேட பொலிஸ் குழுக்கள் கண்டி பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த குழுக்களில் தலா மூன்று பிரதி பொலிஸ்மா அதிபர்களும், தலா மூன்று பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வன்முறைக்கு தலைமை தாங்குவோரின் பிரஜாவுரிமையை ரத்து செய்ய வேண்டும்

## அமைச்சர் மங்கள பரிந்துரை




(கொழும்பு)

இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தும் நபர்களுக்கு பிணை வழங்கக் கூடாது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குவோரின் பிரஜாவுரிமையை இரத்துசெய்யவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திகன மற்றும் தெல்தெனிய பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறை தொடர்பில் தனது டுவிட்டர் இணையத்தள பக்கத்தில அமைச்சர் மங்கள சமரவீர இந்த கருத்தினை பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### சமாதானத்தைப் பாதுகாக்க அனைவரும் இணைவோம்

# இன, மத முரண்பாடுகள் அழிவிற்கே வழியமைக்கும்

## மல்வத்து, அஸ்கிரிய தேரர்கள் அறிவுரை

(கொழும்பு)

இன, மத அடிப்படையில் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது அழிவிற்கு வழியமைக்கும் என கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய அனுநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர். ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இனவாத மற்றும் மதவாத அடிப்படையில்முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வது அனைத்து இனங்களுக்கும் அழிவினையே ஏற்படுத்தும்.

தர்ம சமூகமொன்றை உருவாக்கிக் கொள்வதற்காக கௌதம புத்தர் உள்ளிட்ட அனைத்து மதத் தலைவர்களும் உபதேசங்களைச் செய்துள்ளனர்.

அவர்களைப் பின்பற்றும் நாம் இன முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. 30 ஆண்டு போரின் பின்னர் நாம் சமாதானத்துடன் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த சமாதானத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது.

சமாதானமாக வாழ்வது எவ்வாறு என்பது குறித்து அனைத்து மதத் தலைவர்களும் மக்களுக்கு போதனை செய்ய வேண்டும்.


இந்து, கிறிஸ்தவ, பௌத்த மற்றும் இஸ்லாமியர்கள் இந்த நாட்டில் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

இதனை எதிர்காலத்திலும் தக்க வைத்துக் கொள்வது எவ்வாறு என்பது குறித்து அனைத்து மதத் தலைவர்களும் கவனம் செலுத்த வேண்டும்.

இன, மத அடிப்படையில் பேதங்களை ஏற்படுத்திக் கொள்வது ஆபத்தானது என அனுநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மொபிற்றல் ஊடக அனுசரணையில்
# வடக்கின் பெரும் போர் இன்று ஆரம்பம்


யாழ்.மத்திய கல்லூரி அணியினர்


சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர்

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினருக்கு இடையிலான 112ஆவது பெருந் துடுப்பாட்ட போட்டி இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் மொபிற்றல் ஊடக அனுசரணையில் நடைபெறுகிறது.

## றெய்லர் வாணவேடிக்கை
# தொடரை தக்க வைத்தது நியூசிலாந்து




2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய நியூசிலாந்து அணியை, அணித் தலைவர் வில்லியம்ஸன், றொம் லெதம் ஆகியோருடன் இணை சேர்ந்து மீட்டெடுத்த றோஸ் றெய்லர், அபாரமாக துடுப்பெடுத்தாடி 181 ஓட்டங்கள் விளாச, நியூசிலாந்து அணி 3 பந்துகள் மீதமிருக்கையில் 5 விக் கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றதுடன், தொடரையும் தக்க வைத்துக் கொண்டது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள்கொண்ட ஒருநாள தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டிகள் நிறைவில், இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த நிலையில், 4ஆவது போட்டி டுனிடினில் நேற்று நடந்தது.

நாணயச் சுழற் சியில் வென்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

**பேர்ஸ்டோவ் சதம்**

இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் (42) நல்ல ஆரம்பம் கொடுத்தார். பின், இணைந்த பேர்ஸ்டோவ் (138), ஜோ ரூட் (102) என, இருவரும் சதம் அடித்தனர். அணித் தலைவர் மோர்கன் (5), பட்லர் (0), ஸ்ரோக்ஸ் (1) ஏமாற்றினர்.

இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 335 ஓட்டங்களை எடுத்தது. கரான் (22), மார்க் வூட் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் சோதி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**றெய்லர் விளாசல்**

கடின இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கப்டில், முன்றோ 'டக்' அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தனர். அணித் தலைவர் வில்லியம்சன் 45 ஓட்டங்கள் எடுத்தார். றோஸ் றெய்லர் 19 ஆவது சதம் அடித்தார். நான்காவது விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள் சேர்த்தபோது, அரை சதம் அடித்த லெதம் (71) ஆட்டமிழந்தார். கிராண்ட் ஹோம் (23) ஏமாற்றிய போதும், றெய்லர் வெற்றியை உறுதி செய்தார்.


நியூசிலாந்து அணி 49.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 339 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. றெய்லர் (181), நிக்கோல்ஸ் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தற்போது, தொடர் 2-2 என சமனில் உள்ளது. 5 ஆவது மற்றும் கடைசிபோட்டி 10ஆம் திகதி கிறைஸ்ட் சேர்ச்சில் நடக்கிறது.

**பிறந்த நாள் பரிசு**

இப்போட்டியில் 109 ஓட். எடுத்தபோது, ரன் அவுட்டில் இருந்து தப்பிக்க முயற்சித்த, றோஸ் றெய்லர் தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இருப்பினும், 'ரிட்டயர்ட் ஹேர்ட்' முறையில் வெளியேறாமல், தொடர்ந்து விளையாடி அணியை வெற்றி பெறச் செய்தார். இன்று பிறந்த நாள் கொண்டாட உள்ள இவருக்கு சிறந்த பரிசாக அமைந்தது.

# டில்லியின் தலைவராக கம்பிர்




ஐ.பி.எல்., தொடரில், டில்லி அணியின் தலைவராக கௌதம் கம்பிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபை சார்பில், ஐ.பி.எல்., 'ரி20' தொடர் நடத்தப்படுகிறது. இதன் 11ஆவது 'சீசன்' எதிர் வரும் ஏப்ரல் 7ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதற்கான வீரர்கள் ஏலத்தில் இந்திய அணி வீரர் கம்பிர், கொல்கத்தா அணியில் தக்கவைக்கப்படவில்லை. 8 ஆண்டுகள் விளையாடி இரண்டு முறை (2012,14) கிண்ணம் வென்று கொடுத்த போதும், கழற்றி விடப்பட்டார். இவரை, டில்லி அணி ரூ. 2.8 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. இதன் மூலம், 2008-10க்குப் பின், மீண்டும் டில்லி அணிக்கு திரும்பினார்.

இந்நிலையில், எதிர் வரும் சீசனில் டில்லி அணிக்கு தலைவராக கம்பிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**பெருமை**

இது குறித்து கம்பிர் கூறுகையில், " டில்லி அணியின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டது பெருமையாக உள்ளது. டில்லிக்கு எனது பங்களிப்பை தரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பயிற்சியாளர் ரிக்கி பொன்ரிங்குடன், இணைந்து செயல்பட உள்ளது மகிழ்ச்சி," என்றார்.

பயிற்சியாளர் பொன்ரிங் கூறுகையில், "ஐ.பி.எல்., தொடரில் சிறந்த அணித் தலைவர் என்பதை கம்பிர் அடிக்கடி நிரூபித்துள்ளார். இவரின் தன்னம்பிக்கையான செயல்பாடு சக வீரர்களுக்கும் உதவியாக அமையும்," என்றார்.


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதன உரிமையாளரது பெயர் உட்புகுத்தல் ஆட்சேபனை அறிவித்தல்

எமது பதிவேட்டின் பிரகாரம்
ஆதன உரிமையாளர் பெயர் :- துரைச்சாமிக் குருக்கள் சோமசுந்தரக் குருக்கள்
(உ.கோ:- சுந்தர ஐயர் பாலச்சந்திர சர்மா)
வட்டாரம் 01, கேணியடி ஒழுங்கை, ஆதன இல.103

மேற்குறித்த விபரத்துடன் உள்ள ஆதனத்தை பாலசுப்பிரமணிய ஐயர் முரளிதரக் குருக்கள் பெயர் உட்புகுத்தலுக்காக விண்ணப்பம் செய்துள்ளார். குறித்த ஆதனத்துக்கான உறுதியை பரிசீலனை செய்தபோது 19.10.1981ஆம் திகதிய 533ஆம் இலக்க சிவகுரு சுரேந்திரன் நொத்தாரிசு அவர்களது நன்கொடை உறுதிமூலம் துரைச்சாமிக் குருக்கள் சுந்தர ஐயர் என்பவரால் நிலப்பரப்பு 3ஆனது சுந்தர ஐயர் பாலசுப்பிரமணியன் என்பவருக்கு நன்கொடையளிக்கப்பட்டு, பின்னர் மாதா, பிதா வழி முதுசமாக தன்னை வந்தடைந்ததென்று 21.02.2014ஆம் திகதிய 633ஆம் இலக்க டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு நொத்தாரிசு அவர்களது விளம்பல் உறுதிமூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

எனவே இவ்வாதனத்தின் தற்போதைய உறுதி விளம்பல் உறுதியாகையால் இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்துக்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




செயலாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
(C-1817)

# இனவாதச் சூழ்நிலையில்
# பாரபட்ச நீதியைக் கண்டித்து சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

(ஏறாவூர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழலில் சட்டமும் ஒழுங்கும் பாரபட்சமின்றி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டு நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் வழக்குகளில் ஆஜராகாது நேற்றுப் புதன்கிழமை நீதிமன்றங்களை விட்டு வெளியேறினர்.



இது தொடர்பாக சட்டத்தரணிகள் தெரிவிக்கையில்,

ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் வழக்குகளுக்கு வழமையாக ஆஜராகும் சுமார் 14 சட்டத்தரணிகளும் அதேபோல வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜராகும் சுமார் 8 சட்டத்தரணிகளும் இன்று (நேற்று) புதன்கிழமை காலை நீதிமன்ற அமர்வுகள் ஆரம்பமான போது குறித்த நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு அறிவித்து விட்டு வெளியேறினோம்.

புதன்கிழமை திகதி குறிக்கப்பட்ட எந்தவொரு வழக்குகளுக்கும் சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை.

சட்டத்தரணிகள் கலந்தோலோசனை செய்து புதன்கிழமை இடம்பெறும் வழக்குகளுக்கு ஆஜராவதில்லை என்ற முடிவு எட்டப்பட்டதின் அடிப்படையில் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினோம்.

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில் நீதியில் பாரபட்சம் காட்டப்படுவதால் எமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளோம் என்றனர். (இ)

# அதிகாரியை மாற்ற வேண்டாமென ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பொறுப்பாக இருந்து வரும் சிவில் பாதுகாப்புத் தலைமையகத்தின் பொறுப்பதிகாரியை மாற்றம் செய்ய வேண்டாம் என கோரி ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.



சிவில் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான முன்னாள் போராளிகள் இதில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே சந்தித்து கலந்துரையாடினார். அவர்களின் கோரிக்கைளை கேட்டறிந்து கொண்ட ஆளுநர் இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றதுடன் இராணுவத் தளபதியுடனும்தொலைபேசியில் உரையாடினார்.

குறித்த இராணுவ உயர் அதிகாரியின் மாற்றத்தினை காலம் தாழ்த்துமாறு விடுத்த வேண்டுகோளின் பேரில் அவரின் மாற்றம் தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது. (இ-60)

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பும் கலைமதி மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு பெண்கள் எழுச்சி நாள் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் கலைமதி மக்கள் மண்டபத்தில் பெண் விடுதலை சிந்தனை அமைப்பு வாஹினி கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சோமேசசுந்தரி கிருஸ்ணகுமார், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம், தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோர் வழங்குவர். (இ)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603, 021 567



## நீங்காத நினைவலைகள் ஆண்டு ஒன்பது

அமரர் குமாரசாமி சங்கீர்த்தனன்



மலர்வு 1993 – 05 – 31

உதிர்வு 2009 – 03 – 08



நீங்காத நினைவலைகள் சங்கீர்த்தனா
நிம்மதியை இழந்து விட்டோம்
நீண்ட நாட்கள் சென்றாலும் உன்
நினைவலைகள் நீங்கவில்லை

சீறிவந்த எறிகணையால் உன்
சிறிய உடல் சிதறி விட நம்
இதயங்கள் சிதறியே அன்று
இன்பம் என்ற சொல்லும் சிதறியதே

சங்கீத் என்றவுடன் உன் உதடு
கனிவாக மலரும் அந்த நாட்கள்
மீண்டும் இங்குவராதோ என்று
வேண்டுகின்றோம் இறைவனையே என்றும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (3119)

கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

தகவல்: குடும்பத்தினர்.



## 9 ஆம் ஆண்டு நினைவினில்...

மலர்வு 1968 – 08 – 11

உதிர்வு 2009 – 03 – 08



அன்பாய் சிரித்து எம்மில்
அளவற்ற பாசம் கொண்டு
பார்வையில் அன்பைக் கொட்டி
பணிவிடை செய்தாய் அம்மா
தேம்பி அழுகிறோம் முகம் காண
தேடி வாராயோ தாயே!

பூமிராசா லபிதா

இல. 01, வல்லிநகர், வவுனிக்குளம்.

(3007)

கணவர்:பூமிராசா, பிள்ளைகள்: கோபிநாத், கோகிலாத், லோஜி


## இராசி பலன்

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**இடபம்:** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வம்பு வழக்குகளைச் சமாளிப்பீர்கள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** அடிப்படை வசதிவாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

| | | | |
|---|---|---|---|
| சுக். புத | | | |
| சூரி | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் அச்சுவினி- பரணி | | |
| சனி | குரு.செவ். சந். | | |

08.03.2018

மாசி 24, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு

சப்தமி முழுவதும்

அனுசம் பின்னிரவு 3.26 மணிவரை

சுபநேரம் 7.54-9.24 மணிவரை

இராகுகாலம் 1.54-3.24 மணிவரை

வளவன்

**தனுசு:** பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் கற்பகதரு சங்கத்தில் பெண்கள்



தே.வைகுந்தன்
பிராந்திய முகாமையாளர்
தென்னை
பயிர்ச்செய்கை சபை
யாழ்ப்பாணம்.

தென்னை வளர்ப்பில் தென்னை கற்பகதருசங்க பெண்கள் என்ற கருப்பொருளில் 2018 மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தின தொனிப்பொருளாக தென்னை பயிர்ச்செய்கை சபை கருத்தில் எடுத்துக்கொண்டு எதிர்காலத்தில் தென்னை வளர்ப்பில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கவும் அவர்களுக்கான வலுசேர்க்கும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க ஆயத்தமாக உள்ளது. கற்பகதரு சங்கங்களின் உறுப்பினர்களில் 90% ஆனோர் பெண்களாக இருப்பதனால் பெண்களை கௌரவிக்கும் முகமாக இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.

கடந்த 3 வருடங்களாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் வட பிராந்தியத்தினால் தென்னையினுடைய பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு 30 வருட யுத்த காலத்தில் அழிவுற்ற தென்னைகளை மீள் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் வட பிராந்தியம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து குறிப்பிட்டதொரு முன்னேற்றத்தை வட மாகாணத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் உருவாக்கிக் கொண்டு வருகின்றது. கடந்த வருடங்களில் யுத்தத்திற்கு முன்னைய காலங்களில் தென்னை வளமானது பாரிய அளவில் முன்னேற்றம் கண்டிருந்தது. யுத்தத்தின் போது திட்டமிட்ட வகையில் எமது பெருந்தோட்ட வளமான தென்னையும் முற்றாக அழிக்கப்பட்டது. அத்துடன் தென்னம் தோட்ட உரிமையாளர்கள் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து சென்று விட்டனர். இவ்வாறான பின்னணியில் யுத்தத்திற்கு பின் தென்னை பயிர்ச்செய்கை சபை காலடி வைத்து பாரியளவு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அபிவிருத்தித்திட்டங்களை செய்து கொண்டு வருகின்றது. எமது தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஆளணி குறைவாக இருந்த போதிலும் தென்னை பயிர்ச்செய்கை சபையினால் ஒவ்வொரு கிராமங்களிலும் உருவாக்கப்பட்ட கற்பகதரு சங்கங்களை வளப்படுத்தவும் அவர்களை சக்திப்படுத்தி தென்னையின் வளர்ச்சியில் அவர்களையும் பங்குதாரராக்கி அவர்களுக்கு படிப்படியாக பயிற்சிகளை கொடுத்து கற்பகதரு சங்கங்கள் ஊடாக தென்னையின் அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு அனைத்து வேலைத்திட்டங்களையும் தென்னை பயிர்ச்செய்கை சபை மேற்கொண்டது.

ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக்கப்பட்ட இவ்வாறான கற்பகதரு சங்கங்களின் கூடுதலான உறுப்பினர்களாக பெண்களே தென்னையின் அபிவிருத்தியில் பங்கு கொண்டுள்ளனர் என்பது வெளிப்படை. எமது கற்பகதரு சங்க பெண் உறுப்பினர்கள் அடிப்படை வசதிகளுக்காகவும் அவர்களுடைய இழக்கப்பட்ட வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்காகவும் அதிகரித்துவரும் வாழ்க்கை செலவினை கட்டுப்படுத்தவும் கிராமியப் பெண்கள் துணிச்சலோடு போராடி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான உணர்வெழுச்சி செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக செயன்முறைப்படுத்தி தமது குடும்பம் மட்டுமல்லாது சக பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களையும் பெண்களுக்கான ஆற்றலை வழிப்படுத்தும் செயற்பாடுகளையும் கற்பகதரு சங்க பெண் உறுப்பினர்கள் செய்து வருகின்றனர்.

இலங்கையில் பேசுபொருளாகவும் வாழ்வாதார பயிராகவும் மாறியுள்ள தென்னையினால் கிடைக்கும் வருமானத்தினால் வடக்கிலுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தமது வாழ்க்கைப் பயணத்தைக் கொண்டு நடத்துகின்றனர். பெண்களின் வாழ்வில் எவ்வளவு சவால்கள் எதிர்பட்ட போதிலும் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பெண்கள் அணிவகுத்து நிற்கின்றனர். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்" என்ற பாரதியின் வரிகளுக்கு சாட்சியமாகப் பெண்கள் தென்னை வளர்ப்போடு இணைந்து பயணிக்கின்றனர்.

தென்னை வளர்ப்பின் சவால்களாக கருதப்படும் கருவண்டு, செவ்வண்டு தாக்கங்களினை ஓரளவு குறைப்பதற்கு பெண்களின் சாதுரியத்தன்மையும் அவர்களின் அர்ப்பணிப்பும் ஒவ்வொரு கிராமத்திலும் மக்களையும் தென்னை பயிர்ச்செய்கை சபையினையும் ஒன்றிணைப்பதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளமையையும் காண முடிகின்றது. அதும‌ட்டுமல்லாது எதிர்காலத்தில் தென்னையினால் கிடைக்கும் வருமானமே குடும்பத்திற்கு ஓரளவு போதுமானது என நினைத்துக்கொண்டு தமக்கு முன்னால் உள்ள இடர்களையும் சமாளித்துக் கொண்டு அதற்காக ஆண்களையும் ஒன்றுசேர்த்துக் கொண்டுகூடுதலான தென்னை வளர்ப்பில் எல்லோரும் ஈடுபடுவதற்கான வழிமுறைகளை வகுப்பதிலும் வெற்றி கண்டுள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு எட்டாக்கனியாக இருப்பதுடன் வாழ்க்கைச்சுமை அதிகரித்துக் கொண்டு போவதும் எமது வளங்களை நாமே பயன்படுத்த முடியாத சூழலிலும் எமது கற்பகதரு சங்க பெண்கள் அவற்றிற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு நேரத்தை செலவளிப்பதுடன் தமது குடும்பத்தை கவனிக்கவும் நேரத்தை செலவிட வேண்டியுள்ளது. இவ்வாறான சூழல்களில் ஏற்படும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு கற்பகதரு சங்க பெண்கள் தென்னை வளர்ப்பின் மத்தியில் தென்னைசார் குடிசைக்கைத்தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். தும்பு தயாரிப்பு, சிரட்டைக்கரி, தும்புத்தூரிகை, கால்துடைப்பம் என்பவற்றிற்கான மூலப்பொருட்களை தாங்களே தயாரித்து மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றி வருமானத்தை பெறுவதற்கும் வழிவகை செய்துகொண்டு வருகின்றனர். இருந்தும் வெளி மாவட்டத்தவர்களின் பொச்சுமட்டை, தேங்காய் குறைந்த விலையில் சுரண்டுபவர்களுக்கு எதிராக எமது மூலப்பொருள் எமது பிரதேசத்தினுள் முடிவுப்பொருளாக மாற்றி முடிவுப்பொருள் மட்டுமே வெளியே சந்தைப்படுத்த வேண்டுமென்பதற்காக குரல்கொடுக்க எத்தணிக்கின்றார்கள்.

குறிப்பாக எமது கற்பகதரு சங்க பெண்கள் விஸ்வமடு, மூங்கிலாறு, செம்மலை, மாங்குளம், முள்ளியவளை, நானாட்டான், கல்மடுநகர் போன்ற கிராமங்களில் யானை தாக்கத்தினால் தென்னை அழிவடைவதனை சுட்டிக்காட்டி அதற்கான பாதுகாப்பு பெற்றுத்தருமாறு குரலெழுப்பியுள்ளனர். தென்னை பயிர்ச்செய்கை சபையின் கற்பகதரு சங்க பெண்களின் பங்களிப்பானது சரித்திரத்தில் ஒரு நீண்ட அடையாளமாக அமையும் என்பதோடு தென்னை வளர்ப்பின் பெருமிதங்கள் பெண்களை சென்றடைய வேண்டுமென்பது காலத்தின் தேவையாக கருதப்படுகின்றது.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் மானியங்கள் பெறுவது மட்டுமல்லாது தென்னையை நடுவதிலிருந்து அதனை வளர்த்து பயன்பெறும் காலம் வரையும் எமது தமிழ் பெண்கள் தென்னை மரங்களை தமது பிள்ளைகளாக கவனிப்பதால் வழங்கப்படும் தென்னை நாற்றுக்கள் சிறப்பாக வளர்வதை காண முடிகின்றது.

சமூக வாழ்க்கையின் சகல தளங்களிலும் முன்னணியில் சாதனை படைக்கும் பெண்மணிகளை மகளிர் தினம் கௌரவம் செய்கின்றது. பெண்களை நம் கண்களாக நினைத்து அவர்களை கௌரவிப்பது அனைவரினதும் கடமையாகும்.

# தூய சக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு







(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தூயசக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தூய சக்தி முதல்களின் பாவனையையும் அவற்றின் தேவையையும் பாடசாலை மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம், வடமாகாணக் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து யாழ்.மற்றும் மேற்கு நோர்வேப் பல்கலைக்கழகங்களின் (Western Norway University of Applied Sciences) அனுசரணையுடன், வடமாகாண 1AB பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8 முதல் 11 மற்றும் க.பொ.த. (உ/த) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறை சார்ந்த மாணவர்களுக்குத் தூயசக்தி தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை ஆரம்பித்துள்ளனர்.

இதன் முதற்கட்டமாக மார்ச் 6 முதல் 14 வரையான காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளில் 10 செயலமர்வுகளாக இக்கருத்தரங்கானது நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 70 மாணவர்களின் பங்குபற்றுதலுடன் ஏறத்தாழ 3500 மாணவர்கள் இக்கருத்தரங்கின் மூலம் பயன்பெறவுள்ளனர்.

இக் கருத்தரங்கிற்கான வளவாளர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த ஆண்டு நவம்பர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடந்த பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர் கருத்தரங்கானது தூய சக்தி தொழில்நுட்பம் தொடர்பான விரிவுரைகள், காணொலி விளக்கங்கள், உபகரணங்களுடான செய்முறை விளக்கங்கள் மற்றும் உபகரணக் கையாள்கையுடான கற்றல் விளக்கங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

இக்கருத்தரங்கின் இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்கிடையில் தூயசக்தி தொழில்நுட்பம் சார்ந்த பல் தேர்வுப் போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெறும் மாணவர்களுக்கு மே மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இதுதவிர பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபெறும் மாணவர்களுக்கு தூயசக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பான சுவரொட்டி, ஆவணப் படமாக்கல் மற்றும் கண்காட்சிப் பொருளமைத்தல் போன்ற போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்புக்களும் வழங்கப்படும். இப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கும் மே மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் அதேவேளை, அன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள துறைசார் வல்லுநர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இக்கருத்தரங்கானது நேற்று முன்தினம் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையிலும் நேற்று விக்ரோறியாக் கல்லூரியிலும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியிலும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஹாட்லிக் கல்லூரியிலும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் 14 ஆம் திகதி புதன்கிழமை வேலணை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. அதனை தொடர்ந்து வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (இ-9)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி சிவமணி பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாலர் பாடசாலை முன்றலில் பாலர் பாடசாலை அபிவிருத்தி சபைத் தலைவர் தி.தங்கவேலு தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை ஆசிரியர் எஸ்.சோதிலிங்கம், நாவற்குழி கிழக்கு கிராம உத்தியோகத்தர் செ.சிவசுப்பிரமணியம், கௌரவ விருந்தினர்களாக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சத்தியசீலன், நாவற்குழி முன்பள்ளி இணைப்பாளர் ர.தர்மிலா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கு நேர்முகப் பரீட்சை திகதிகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடத்தப்படுகின்ற சேவை முன் மூன்று வருட கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பாடநெறியை பயிலுவதற்கு 2017 ஆம் ஆண்டுக்குரிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களுக்குரிய நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13, 14, 15, 16 ஆம் திகதிகளிலும், சங்கீதம் மற்றும் நடன பாடங்களுக்குரிய நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

# திரைப்பட மேதையின் புகழ்பெற்ற திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

உலகப் புகழ்பெற்ற ஜப்பானியத் திரைப்பட மேதை 'யசுஜிரோ ஒசு' வின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'ரோக்கியோ ஸ்ரோறி' என்ற புகழ்பெற்ற திரைப்படம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இலவசமாகக் காண்பிக்கப்படும். காட்சியின் முடிவில் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வமுள்ள யாரும் நிகழ்ச்சிக்கு வருகைதரலாமென, பொதுசன நூலக வாசகர் வட்டத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# "வலுவான பெண்ணே-முன்னேற்றத்தின் வழிகாட்டி" மகளிர் தினத்தை முன்னிட்டு மைத்திரி வாழ்த்து

(கொழும்பு)

மானிட வர்க்கத்தின் இருப்பினை உறுதி செய்யும் படைப்பாற்றலை தன்னகத்தே கொண்ட பெண்கள், மனித நாகரிகத்தின் ஆரம்பம் முதலே போற்றப்பட்டு வருகின்றனர். அந்த உயிரியல் சிறப்பியல்பினை விஞ்சிய சமூகம் சார்ந்த பெறுமதியும் அவர்களுக்கு இருக்கின்றது என்பதை நவீன கலாசார மனிதன் புரிந்து கொண்டுள்ளான். அந்தப் புரிந்துணர்வை யதார்த்த மாக்கும் வகையில் சமூகத்தில் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய கௌரவத்தையும் அபிமானத்தையும் வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எனது பாராட்டைத் தெரிவிக்கும் முகமாகவே சர்வதேச மகளிர் தினத்திற்கான இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைக்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இலங்கை, வளர்ச்சியடைந்த மேற்குலக நாடுகளுக்கு முன்னரே பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை பெற்றுத்தந்த நாடாகும். உலகின் முதலாவது பெண் பிரதமரையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதியையும் இலங்கை உருவாக்கியதற்கு வளர்ச்சியடைந்த இந்த சமூக பின்னணியே காரணமாகும். பெண்களுக்கு சம கல்வி மற்றும் தொழில் உரிமை ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் மத்தியில் நாம் முன்னிலை வகிக்க முடிந்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பின் பல உயர் பதவிகளை பெண்களுக்கு பெற்றுக்கொடுக்க இந்தக் கல்வி உரிமையே காரணமாகும். அவ்வாறே அரசியல் நிர்வாகத்தில் பெண்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பிற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டதன் விளைவாக அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெண்களின் பிரதி நிதித்துவத்தினை அதிகரிப்பதற்கான எமது எதிர்பார்ப்பினையும் யதார்த்தமாக்கிக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

பெண்களின் தொழில் முயற்சிகளை விருத்தி செய்து நாட்டின் கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறையில் பெண்களின் பங்களிப்பினை உயர்த்துவதே எமது அடுத்த இலக்காகும். அதற்கான விசேட கடன் திட்டங்களும் தொழிற் பயிற்சி செயற்றிட்டங்கள் பலவும் அரச மற்றும் அரச சார்பற்ற மட்டங்களில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த செயற்றிட்டங்களின் இறுதி இலக்கு நாட்டின் மொத்த சனத்தொகையில் அரை வாசிக்கும் அதிகமான எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் பெண் சமூகத்தை உயரிய சமூக அபிவிருத்தியைக் கொண்ட நாட்டின் பங்காளர்களாக மாற்றுவதே ஆகும்.

"வலுவான பெண்ணே - முன்னேற்றத்தின் வழிகாட்டியாகிறாள்" எனும் தொனிப் பொருளில் கொண்டாடப்படும் இவ்வருட சர்வதேச மகளிர் தினமானது, இந்த மகத்தான குறிக்கோள் பற்றிய கலந்துரையாடலை சமூகத்தில் ஏற்படுத்தும் சிறந்ததோர் தளமாக அமையுமென நான் நம்புகிறேன். இந்த உயரிய நோக்கங்களை அடையும் பொருட்டு ஏற்பாடு செய்யப்படும் சகல செயற்றிட்டங்களுக்கும் எனது பாராட்டைத் தெரிவிப்பதுடன் அச்செயற்றிட்டங்களுடன் இணைந்து செயற்படும் சகல பெண்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ)


## மணமகன் தேவை

வடமராட்சி இந்து கௌரவ 1972 மகம், அரச பணி புரியும் பெண்ணுக்கு அரச பணி அல்லது தனியார் பணி அல்லது வர்த்தகம் செய்யும் உள்நாட்டு மணமகன் தேவை.

தொடர்புக்கு:-(சகோதரன்)
0764847171

(அ-1805)



## திரு.பொன்னையா- இரட்ணராஜா அவர்களின்
# பணி நயப்பு வாழ்த்து

## திரு.பொன்னையா-இரட்ணராஜா
(B.Sc, PGDE)

பெயர்: திரு.பொன்னையா- இரட்ணராஜா
ஆரம்பக் கல்வி: யா/ கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை
இடைநிலைக் கல்வி: யா/ ஞானசாரியார் கல்லூரி,
யா/ ஹாட்லிக் கல்லூரி
ஆசிரியர் நியமனம்: 16.04.1984

**சேவையாற்றிய பாடசாலைகள்**

க/புசலாவ சி.சி.தமிழ் வித்தியாலயம்
16.04.1984- 14.08.1989
யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்
1989.08.15-1992.10.06
யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
1992.10.07-2008.03.27
யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
2008.03.28-2016.04.28
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்
2016.04.29-2018.03.07



இன்றுபோல் என்றும் இனிமையாய் வாழ்ந்திட
வாழ்த்துகின்றோம் மனம் நிறைந்து
வாழ்க வாழ்க வளம் பல பெற்று...

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.

(அ-1804)



## கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம்,முல்லைத்தீவு
## பதவி விண்ணப்பம் கோரல். (வெளிவாரி)

**01.பதவி :- விற்பனை உதவியாளர்**

சம்பள குறியீட்டு இல - 308/17
சம்பள அளவுத்திட்டம் :- 12800 – 100X10-110X10 - 14900
(13/2015 இன் சுற்றறிக்கையின்படி E.P.F , E.T.F உட்பட ஏனைய கொடுப்பனவும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

01.கூட்டுறவு பணியாளர் கனிஷ்ரதர சான்றிதழ்.
அல்லது
02.08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**02. பதவி :- காவலாளி**

சம்பள குறியீட்டு இல - 315/17
சம்பள அளவுத்திட்டம் :- 12800– 100X10-110X10 - 14900
(13/2015இன் சுற்றறிக்கையின் படி E.P.F-, E.T.F உட்பட ஏனைய கொடுப்பன்வும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

01.05ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**பிரதான அறிவுறுத்தல்கள்.**

01.ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

02.சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

03.விண்ணப்பதாரி 28.03.2018 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

04.விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட வேண்டிய பிரதிகள்.
அ) தேசிய அடையாள அட்டைப் பிரதி
ஆ) பிறப்புச் சான்றிதழ் பிரதி
இ) கல்விச் சான்றிதழ் பிரதி
ஈ) வதிவிட உறுதிப்பத்திரம்
உ) நற்சான்றிதழ்

05. விண்ணப்பங்கள் சங்கத்தால் இதற்கென அச்சிடப்பட்டுள்ளது. சங்க கடமை நேரத்தில் ரூபா 10.00 செலுத்தி சங்க பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

06.தெளிவான எழுத்துக்களில் சரியான விபரங்களுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 28.03.2018ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (இத் தபால் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தொடர்பாக குறிப்பிடப்பட வேண்டும்) இப்பதவி விண்ணப்பம் தொடர்பான விளக்கங்கள் தேவைப்படின் தொடர்புகளுக்கு-024 324 3483

கு.விக்ரர் ஜெயசிங்கம், தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லைத்தீவு.

(அ-1814)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>தொ.இ: B/8301 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BFA/ மாணவி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8302 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 21செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8303 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 35 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8309 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8304 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: G/8312 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 59 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>தொ.இ: B/8305 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 21<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/கணக்கு பதிவாளர்<br>தொ.இ: G/8216 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆளணிப் பிரச்சினை தொடர்பிலான சவாலை சுகாதார அமைச்சு எதிர்கொண்டு வருகின்றது

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**வடக்கிலுள்ள ஆளணிப்பிரச்சினை தொடர்பிலான சவாலை தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு எதிர்கொண்டு வருகின்றது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தும் நிகழ்வு புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வைத்தியர் ப.தயானந்தரூபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆதார வைத்தியசாலையின் பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைத்துள்ளதுடன் இரு கட்டங்களையும் திறந்து வைத்துள்ளார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் பயன்பாட்டிற்கான சுகாதார திணைக்களத்திற்குரிய கட்டடங்கள் நான்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

23 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் ஒன்றும் 33 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பிராந்திய மருந்து வழங்கல் கட்டடம் ஒன்றும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டடம் 31 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான நிதியினை உலக காசநோய் மற்றும் மலேரியா தடுப்பு நிதியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்தது.

இன்று மக்கள் பயன் பாட்டிற்கு திறந்து விடப்பட முடியாத இரண்டு கட்டடங்கள் தொடர்பில் ஒரு கருத்தைக் கூறலாம் என்று நினைக்கின்றேன். அதில் ஒன்று சுகாதார வைத்திய அதிகாரியின் விடுதியும் வெளிநோயாளர் பிரிவு கட்டடமும் மாந்தை கிழக்கில் திறக்க முடியாத நிலை காணப்பட்டுள்ளது.

இதனை நிறுத்தியதற்கான காரணம் சுகாதார திணைக்களத்தில் உள்ள ஆளணிப் பிரச்சினை. முல்லைத்தீவு மாவட்டத்தில் போதியளவு வைத்தியர்கள் இல்லாமையினால் அதற்குரிய வைத்தியர்களை நியமிக்க முடியாத நிலையில் அவற்றை திறந்து வைத்து மக்களுக்கான சேவைகளை வழங்க முடியாத நிலையில் அவற்றை திறந்து வைப்பதில் விசனம் அடைகின்றோம்.

இது ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாணத்திலுள்ள வைத்திய உத்தியோகத்தர்கள், வைத்திய சேவைக்குரிய ஆளணிப் பிரச்சினையை எடுத்துக் காட்டுகின்றது. வடக்கு மாகாணத்தில் முதலாவதாக எழும் பிரச்சினை ஆளணிப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

வடக்கில் உள்ள ஆளணிப் பிரச்சினை தொடர்பிலான சவாலை தொடர்ந்து வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு எதிர் கொண்டு வருகின்றது. அதற்கு எதிராக போரிட்டுக் கொண்டே இருக்கின்றது.

இந்த ஆளணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முதலமைச்சருடன் சேர்ந்து முன்னிப்போம்.

அத்துடன் கட்டுமானங்கள் நிவர்த்தி செய்யப்படும் போது அதற்கான ஆளணி தேவையையும் நிவர்த்தி செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள் உள்ளாக்கப்படுகின்றோம். எங்களாலான முயற்சிகள் அனைத்தையும் செய்து இந்த வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்வோம் என்றும் தெரிவித்தார். (2-281)

# கலாசாரப் பெருவிழாவும் பரிசில் வழங்கலும்

(கிளிநொச்சி)

கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கலாசாரப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கண்ணகி நகரிலுள்ள சிறி கண்ணகிநகர் அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமரர் தி.இராசநாயகம் அரங்கில் நடைபெறவுள்ள நிகழ்விற்கு கண்டாவளை பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய கோ.நாகேஸ்வரன் தலைமை தாங்குவார். நிகழ்வுக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன், கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. பா.அபிராமி கலந்து கொள்ள உள்ளார்.

வரவேற்புரையை கண்டாவளை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் ம.பிரதீப் நிகழ்த்துவார்.

பிரதேச பண்பாட்டை ஆவணப்படுத்தும் வளை ஓசை -நாதம் 7 நூல் வெளியிடப்படவுள்ளது.

வெளியீட்டுரையை பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.பிரபாகரன் நிகழ்த்த முதல் பிரதியை கண்ணகிநகர் வர்த்தகர் யோ.நிசாந்தகுமார் பெற்றுக்கொள்வார்.

நூலின் ஆய்வுரையை மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆற்றுவார்.

இந் நிகழ்வில் கோரக்கன்கட்டு புத்தொளி கலா மன்றத்தின் தனி நடனம், பெரியகுளம் கலையொளி மன்றத்தின் சமூக நாடகம், கண்டாவளை முத்தமிழ் கலாமன்றத்தின் வில்லுப் பாட்டு ஆகியவை நடைபெறவுள்ளன.

இதேவேளை 2017 ஆம் ஆண்டில் பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கப்பவுள்ளது.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் விஞ்சி நிற்பது அரசனின் அதிகாரமா? பெண்மையின் பெருமையா?" எனும் தலைப்பில் பட்டிமன்றம், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.விந்தனின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கண்ணகிநகர் அண்ணாவியார் இயக்கத்தில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்து நடைபெறவுள்ளது.

2017 ஆம் ஆண்டிற்குரிய கலைஒளி விருது வழங்கப்படவுள்ளது. (2)

# கோமரசன் குளம் கல்வாரித் திருத்தலத்தில் திருச்சிலுவைப் பாதையும் திருப்பலியும் நாளை

(பனிக்கன்குளம்)

கண்டி பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்து அரசினால் தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள அவரசகாலச் சட்டத்திற்கு அமைவாக நேற்று புதன்கிழமை தொடக்கம் நாளை வெள்ளிக் கிழமை வரை இடம்பெற விருந்த வவுனியா கோமரசன் குளத்திற்கான பாதயாத் திரை மற்றும் எதிர்வரும் 16 ஆம் திகதி அன்று நடை பெற விருந்த பாதயாத்திரை ஆகியன மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி. இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை யினால் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோமரசன் குளம் கல்வாரித் திருத்தலத்தில் திருச்சிலுவைப் பாதையும் திருப்பலியும் மற்றும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஓலைத் தொடுவாய் கர்த்தர் திருத்தலத்தில் திருச்சிலுவைப் பாதையும் திருப்பலியும் இடம்பெறும் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வரட்சியால் 130 ஏக்கர் நெற்செய்கை மடுப்பிரதேசத்தில் முழுமையாக அழிவு

(கண்டாவளை)

மன்னார் மடுப் பிரதேசத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக 130 ஏக்கர் வரையான நெற்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நிலவும் கடுமையான வரட்சி காரணமாக இவ்வாண்டுக்கான காலபோக பயிர்ச் செய்கையே அழிவடைந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தின் மடுப்பிரதேசத்தின் பாலம்பிட்டி தட்சணாமருதமடு, சின்னப்பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளில் வரட்சியினால் பெருமளவான பயிர்ச்செய்கைகள் அழிவடைந்துள்ளன.

இதுவரை 130 ஏக்கர் வரையான நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளன என்றும் எஞ்சியுள்ள பயிர்ச்செய்கைகளை பாதுகாக்கும் வகையில் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி ஆறுகளிலும் குளங்களிலும் உள்ள நீரை இறைத்து விவசாய செய்கையை பாதுகாக்க விவசாயிகள் கடுமையாக முயன்று வருகின்ற போதும், குறித்த நீர் கூட போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக வரட்சியினால் இவ்வாறான அழிவுகளை தாம் எதிர்கொண்டு வருவதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (2-315)




# விண்ணப்பத்தில் கையொப்பமிட சமுகமளிக்கவும்

## அதிபர் அறிவிப்பு

கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் இவ்வருடம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு முதலாம் தடவை மற்றும் இரண்டாவது தடவை தோற்றும் மாணவர்கள் தங்கள் பரீட்சைக்கான தகவல்களின் கணனித் தரவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்கு இன்றும் நாளையும் பாடசாலை நேரத்தில் சமுகமளிக்குமாறு அதிபர் மு.இரவீந்திரன் கேட்டுள்ளார். (2)

# பெண்கள், சிறுவர்களுக்கு சமூகத்தில் தகுந்த பாதுகாப்பு கிடைக்க வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட மகளிர் ஒன்றியத் தலைவி தெரிவிப்பு

(கண்டாவளை)

போரினால் கடுமையாகப்பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கு அவர்கள் வாழும் குடும்பத்திலும் சமூகத்திலும் உரிய பாதுகாப்புக் கிடைக்கவேண்டுமென கிளிநொச்சி மாவட்ட மகளிர் ஒன்றியத்தின் தலைவி திருமதி. அஞ்சலா வசந்தி ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வருடாந்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக மேற்படி அமைப்பின் தலைவரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது.

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தில் கணவன்மாரை இழந்து காணாமல் ஆக்கப்பட்ட கைவிடப்பட்டவர்கள் என பல தரப்பட்ட வகையில் அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன.

பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் சமூகத்திலும் குடும்பத்திலும் பல்வேறு நெருக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைத்திருந்தாலும் இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

குறிப்பாக, தனித்திருக்கின்ற வீடுகள் பாதுகாப்பற்ற மற்றும் தற்காலிக வீடுகளில் வாழ்கின்ற குடும்பங்களும் இதேபோல போக்குவரத்துக்களின் போதும் பெண்கள் மீது பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன.

கிராமங்கள் தோறும் சிறுசிறு தொழிற்சாலைகள் அமைக்கவேண்டும். குறிப்பாக, எமது மாவட்டத்தில் அதிகளவான பால் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்ற போதும், அவை அனைத்தும் வேறு இடத்திற்கே கொண்டு செல்லப்பட்டு முடிவுப்பொருளாக எமது மாவட்டத்தின் மக்கள் நுகர்வுக்காக வருகின்றது. ஆகவே இதற்கான ஒரு தொழிற்சாலை இருக்குமாகில் நேரடி பாலைக் கொள்வனவு செய்து ஒரு உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் ஏற்படுத்த முடியும்.

ஆகவே சர்வதேச மகளிர் தினத்திலே போரினால் பாதிக்கப்பட்ட மக்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்புகளைப் பெற்றுத்தர அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் கூறியுள்ளார். (2-315)

# உப–உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் முன்வர வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கைகளில் உப உணவுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும் என பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக குளங்களின் நீர்மட்டம் மிக வேகமாக குறைவடைந்துள்ளதுடன் சிலகுளங்கள் நீர் இன்றிக் காணப்படுகின்றன.

இந்நிலையில் இரணைமடுக்குளத்தில் உள்ள நீரைப் பயன்படுத்தி 900ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் . குறிப்பிட்ட100 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கைகள் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சி கோவிந்தன் கடைச்சந்தியில் அமைந்துள்ள இரணைமடுத் திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் நடைபெற்ற சிறுபோக ஆலோசனைக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார்.

எமது மாவட்டத்தில் உப உணவுச்செய்கை என்பது மிக முக்கியமான ஒன்று. அதாவது மாவட்டத்திற்கு தேவையான உழுந்து. பயறு. கௌபி என்பவற்றின் உற்பத்தி என்பது மாவட்டத்தில் மிக மிகக்குறைவாகவே காணப்படுகின்றது.

அதேநேரம் இவற்றில் இருக்கக்கூடிய சில போசணை மட்டங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய கடலுணவுகளும் எமது மாவட்டத்திற்கு சரியாக கிடைப்பதில்லை. எமது மாவட்டத்திற்கு தேவையான உபவுணவுப் பயிர்களைப் பயிரிடவேண்டிய தேவை மிக அவசியமாகும்.

இதனைவிட நெற்செய்கை காணிகளில் அவரையினத் தாவரங்களை பயிரிடுவதன் மூலம் நிலத்தினையும் வளமாக்கிக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்ட அவர், சிறுதானிய செய்கைகளை மேற்கொள்வதற்கு விரும்புகின்ற விவசாயிகளுக்குரிய விதைகளை ஐம்பது வீத மானியத்திலும் இலவசமாகவும் வழங்க பல திட்டங்கள் உள்ளன.

இதனைவிட ஆளணிவளத் தேவைக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தியும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளமுடியும். வரட்சியை நீக்கக் கூடியதும் சிறிய அளவு நீர்ப்பாசனத்தையும் பயன்படுத்தி அதிக நன்மையடையக்கூடிய இவ்வாறான பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள விவசாயிகள் முன்வரவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

# மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் முல்லையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தாண்டில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக மீள்குடியேற்ற அமைச்சினால ஆயிரத்து 157.871 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக மாவட்ட செயலகத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பல நிதியீட்டங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கடந்த ஆண்டு மீள்குடியேற்ற அமைச்சினுடைய நிதியொதுக்கீடுகளில் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.'

அதாவது கடந்த ஆண்டு ஆயிரத்து 157.871 மில்லியன் ரூபா நிதியில் மூவாயிரத்து 445 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் இதில் புதிய வீடுகளை நிர்மாணித்தல், சேதமடைந்த வீடுகளை புனரமைத்தல், வாழ்வாதார உதவித்திட்டங்கள் கல்வி அபிவிருத்திக்கான கட்டுமானங்கள்.குடிநீர் அபிவிருத்தித்திட்டம், மின்விநியோகம், விவசாயம் சார் நடவடிக்கைகள் சிறிய குளங்களை புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் குறித்த நிதியொதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# நீர்ப்பட்டியலில் ஒரு மாதத்திற்கு மேல் நிலுவைத் தொகை காணப்படின் நீர்த்துண்டிப்பு செய்யப்படும்

## மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவிப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மன்னார் பிரதேச நீர்ப் பாவனையாளர்கள் தமது நீர்ப்பட்டியலில் ஒரு மாதத்திற்கு மேல் நிலுவைத்தொகை காணப்பட்டால் உடனடியாக முழுத்தொகையினையும் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் செலுத்தி நீர்த்துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

முழுத்தொகையையும் செலுத்தாத பாவனையாளர்களுடைய இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.. துண்டிக்கப்பட்ட இணைப்புக்களை மீள் இணைப்பு செய்ய தண்டப்பணம் அறவிடப்படும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் நிலுவைத்தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் அன்றைய தினம் நீரிணைப்பு துண்டிக்கப்படும் என மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறுப்பதிகாரி மேலும்தெரிவித்துள்ளார் (2-281)

# பாடல் நயத்தல் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம்



(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட பிரதேச செயலகத்தினால் இடம்பெற்ற பாடல் நயத்தல் போட்டியில் (18 வயதுக்குட்பட்ட) அகில இலங்கை ரீதியிலும் முதலாமிடத்தை பெற்று வவு/ஓமந்தை மத்திய கல்லூரி மாணவி சற்குணராஜா ஜீவநந்தினி வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் இவருக்கான தங்கப்பதக்கம், சான்றிதழ் என்பன அமைச்சர் எஸ்.பீ.நாவின்னவினால் வழங்கி வைக்கப்பட்டது.

சற்குணராஜா ஜீவநந்தினி வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் கலைப் பிரிவில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)



முல்லைத்தீவு உண்ணாபுலவு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் கட்டட தொகுதி நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. உலக காசநோய் மற்றும் மலேரியா தடுப்பு நிதியத்தில் இருந்து வழங்கப்பட்ட 23 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சிவாஜிலிங்கம் மீதான வழக்கு ஏப்ரல் 2இற்கு ஒத்திவைப்பு

(பனிக்கன்குளம்)

கடந்த 22 ஆம் திகதி வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் காணி சுவீகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மீதான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரச சொத்து துஷ்பிரயோகம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் இவர் மீது முல்லைத்தீவு பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின் குமார் தலைமையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாட்டில் இல்லாத காரணத்தால் அவர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் எஸ்.எச். எம்.மனாறுதீன், ஆ.முகம்மது பாறுக் ஆகியோர் தங்கள் வாதங்களை முன்வைத்துள்ளார்கள்.இதன் அடிப்படையில் சிவாஜிலிங்கத்திற்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாக அவர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை மீண்டும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ் மாருதம் 2018

## இரு தினங்கள் நடைபெறும்

(வவுனியா)

தமிழ் மாமன்றம் ஆண்டு தோறும் நடத்தும் முத்தமிழ் சங்கமமான 'தமிழ் மாருதம் 'இவ்வாண்டு ஒரு பண்பாட்டுப் பெருவிழாவாக எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில், காலை, மாலை என இரு நேர அமர்வுகளாக வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பங்குபற்றும் கலைஞர்கள் ஒன்றிணைவில் இசை, நாடகம், வில்லுப்பாட்டு, விவாத அரங்கு, கோவலன் கூத்து, சுழலும் சொற்போர், நாட்டிய நாடகம், கவியரங்கம், பட்டிமன்றம் என முத்தமிழ் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், தமிழ் மாமன்றம் நடத்திய வன்னியின் வாதச்சமர் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு, தமிழ்மாமன்றத்தின் ஆண்டு மலரான 'தமிழ் மாருதம் 2018' வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ளன.


எதிர்வரும் 10 ஆம் திகதி, சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கண்டி வீதியில் அமைந்துள்ள விபுலானந்தர் சிலையருகிலிருந்து ஊர்வலமாக ஆரம்பமாகி கலாசார மண்டபத்தை வந்தடைந்து தமிழ்மாருதம் 2018 நிகழ்வு ஆரம்பமாகி, தொடர்ச்சியாக இரு நாட்கள், இரு அமர்வுகளாக நிகழ்வுகள் இடம்பெறும்.

அத்துடன், இரு நாட்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை, வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம் என நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த புத்தக நிலையங்கள், பதிப்பகங்கள் ஒன்றிணைவில் மாபெரும் புத்தகக் கண்காட்சி மற்றும் மலிவு விற்பனையும், ஓவியக் கண்காட்சியும் இடம்பெறும்.

அனுமதி முற்றிலும் இலவசமான இந் நிகழ்விற்கு, கலை இலக்கிய ஆர்வலர்கள், புத்தகப் பிரியர்கள், பாடசாலை மாணவர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் மாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (2)

# கலைத்தரிசனம்





## "நகைச்சுவை வேந்தன்" "கலைச்சுடர்"
## கதிரன்-சரவணமுத்து (வாத்தி) அவர்களுடனான சந்திப்பு

**மாவை கலட்டி தெல்லிப்பழை எனும் ஒரு சிறு கிராமத்தில் 09.10.1947 ஆம் ஆண்டு பிறந்த கதிரன் சரவணமுத்து (வாத்தி) ஈழத்து நாடகமரபில் உன்னத இடத்தைப் பெற்ற நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து நாடகங்களில் நடித்ததை பெருமை யாகச் சொல்லிப் பூரிக்கும் இவர் சிறந்த நாடக உடுக்குக் கலைஞன் ஆவார்.**

**எந்தப் பாத்திரத்தைக் கொடுத்தாலும் அதை சவாலாக ஏற்று நடிக்கும் வல்லமை கொண்ட இவரை பெருமைப்படுத்தியது நகைச்சுவைப் பாத்திரங்களே.**

**மேடையில் தோன்றி தனது வசன உச்சரிப்பாலும் உடல் மொழியாலும் பார்வையாளர்களை சிரிக்க வைக்கும் இவர் மரபுச்சுடர், விகடமணி, கலைச்சுடர், நகைச்சுவை, வேந்தன் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். தனக்கு இன்னமும் கலாபூஷணம் விருது கிடைக்காதது பெரும் கவலை அழிப்பதாகக் கூறும் இவர் தன்னைப் பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய செவ்வி பிரசுரமாகிறது.**

**✦ ஈழத்தமிழரின் அரிய கலை வடிவங்களில் இசை நாடகம் முதன்மை யானதாகும். அந்த வகையில் அதற்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

நான் ஒன்பது வயதாக இருக்கும் போது, எமது ஊரில் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில், திரு.சிதம்பரம் கதிரவேலனால் பழக்கப்பட்ட நாடகத்தில் வேலைக்காரன் வேடத்தில் தோன்றி நடிக் கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்நாடகத்தை இப்பொழுது நினைத்தாலும் என் மனம் பெரிதும் பரவசப்படுகிறது. அப்போட்டியில் அந்த நாடகம் தான் முதற்பரிசைத் தட்டிக் கொண்டதென்பதை பெருமையுடன் நினைவு கூறுகின்றேன். அந் நாடகத்தில் நடித்ததை பார்த்திருந்த எம்மூர் நாடகக் கலைஞராகிய அமரர் சி.செல்வராசா என்பவர் என்னை நடிகமணி வி.வி.வைரமுத்திடம் கூட்டிச் சென்று அறிமுகப்படுத்தினார். நடிகமணியின் வஸந்த கான நாடகசபையினரால் அரங்கேற்றப் பட்ட "பூதத்தம்பி" நாடகத்தில்தான் முதன் முறையாக மேடையேறியதும் பெரிய சனக் கூட்டத்தினர் மத்தியில் நடித்து கைதட்டு சபாஸ் பெற்றதும் நான் முதன்முறை நாடக ஒத்திகைக்கு சென்றபோது நாடக ஒத்தி கையிலிருந்த சக நடிகர்கள் என்னைக் கண்டதும் இந்த உலக்கையை வைத்து என்ன செய்யப்போகிறீர்கள் என்று ஏளனம் செய்த போது எனது மைத்துனரும் சக நடிகருமான அமரர் செல்வராசா அவரைப் பற்றி போகப்போகத்தான் தெரியும் என்று சொல்லி என்னை ஆறுதல்படுத்தியதையும் நினைவு கூறுகின்றேன்.

**✦ இசை நாடகத்தில் துறை தோய்ந்த கலைஞராகத் திகழும் தாங்கள் இதுவரை எந்தெந்தப் பாத்திரங்களில் நடித்தீர்கள்?**

நான் முதன்முதல் பூதத்தம்பி நாடகத்தில் சேவகன் பாத்திரத்திலேயே நடித்தேன். தொடர்ந்து அரிச்சந்திராவில் வசிட்டராகவும், குடிமகனாகவும், நட்சேத்திர ஐயராகவும், அயலாந்துப் பிள்ளையாகவும், விசுவாமித்திராகவும் தோன்றியதோடு வேறு எப் பாத்திரத்திற்கும் யாராவது வராவிட்டால் அப்பாத்திரங்களையும் நிறைவு செய்வதில் பின்னிற்பதில்லை.

சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் தோழியாகவும், சுமாலியாகவும், சித்திர புத்திரனாகவும், வள்ளி திருமணத்தில் குட்டியண்ணாவாகவும், ஏழுபிள்ளை நல்லதங்காளில் வேடனாகவும் மூழியலங்காரியின் தூதுவனாகவும் பக்த நந்தனாரில் புலையர் கூட்டத்திராகவும் நடித்திருக்கிறேன்.

**✦ இவற்றுள் தங்களுக்குப் பிடித்த பாத்திரம் என்றால் எதனைக் குறிப்பிடுவீர்கள், காரணம்?**

பொதுவாக நான் நடித்த பாத்திரங்களில் எல்லாமும் எனக்குப் பிடித்தவைதான். இருந்தபோதிலும் அரிச்சந்திர நாடகத்தில் நட்சேத்திர தரகராக நடித்ததைக் குறிப்பிடலாம். ஏனெனில் நாடகத்தில் நேரத்தைக் கூட்ட வேண்டிய தேவை ஏற்படும் போது, அண்ணாவியார் தம்பியா கொஞ்சம் நீட்டிக் காட்டடா. அத்தகைய திறமை என்னிடமிருந்ததையும் நான் உணருகிறேன்.

**✦ நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களுடன் இணைந்து நடித்துள்ளீர்கள். அவரிடமிருந்து நீங்கள் எவ்வகையான அனுபவங்களைப் பெற்றீர்கள்?**

நான் ஒரு சாதாரண குடிமகன். அடுத்த வீட்டுக்காரனுக்கு நான் யாரென்று தெரியாதிருந்த என்னை ஒரு சிறந்த நடிகனாக, ஒரு காமெடிநடிகனாக மற்றவர்கள் கைதட்டி விசில் அடித்து பாராட்டக்கூடிய, ஊரறிந்த கலைஞனாக, நாடறிந்த வித்துவானாக வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர் நாடக மணியே. என்னை புடம்போட்ட பெருமை அவரையே சாரும்.

**✦ இவருடன் நடிக்கத் தொடங்கிய பின்னர் உங்கள் வளர்ச்சி எவ்வாறு இருந்தது?**

நடிகமணி இறந்த பின்னும் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய நாடகக் கலைஞர்கள் என்னைத் தேடி நடிக்கக்கூப்பிடுமளவிற்கு என்னைப் பிரபல்யப்படுத்தியவர். குறிப்பாக சீரணியூர் செல்வராசா, அரியாலையூர் செல்வரத்தினம், சுன்னாகம் வதிரிநாதன், பளை இரத்தின குமார், மாவிட்டபுரம் சிதம்பரநாதன் ஆகியோர் என்னை அணுகி நடிக்க அழைக்கும் அளவிற்கு என்னை வளப்படுத்தியவர் நடிகமணியே.

**✦ உங்கள் நாடக வரலாற்றில் மகிழ்நெறி, அவலச் சுவை இவை இரண்டிலும் தாங்கள் எதில் அதி கம் நடித்தீர்கள், காரணம்?**

என்னைப் பொறுத்தவரை மகிழ்நெறியோ அவலச் சுவையோ மக்களை மகிழ்விப்பதற்காக நடிக்கிறேன். ஒரு நடிகனுக்கு இருக்க வேண்டிய பண்புகளில் முதன்மையானது எந்தப் பாத்திரத்தைக் கொடுத்தாலும் அதை ஏற்று அந்தப் பாத்திரத்தை உள் வாங்கி அந்தப் பாத்திரமாய் வாழ்ந்து காட்ட வேண்டியது தான். அதை நான் மனவிருப்புடன் ஏற்று செய்திருக்கிறேன்.

நகைச்சுவையோ அவலச்சுவையோ மக்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே நடிக்கிறேன். அதில் மனநிறைவும் காண்கின்றேன்.

**✦ கலையில் ஈடுபடுவதால் கல்வி குறைந்து விடும் என்று கூறுபவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

கலையில் ஈடுபடுவதால் கல்வி வீழ்ச்சியடையும் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. இப்போது இருக்கும் கல்வி முறையில் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்துகிறேன்.

உண்மையாக படிக்க வேண்டும் என மனதால் உணர்ந்த பிள்ளைகள் வாழ்க்கையில் வெற்றி கண்டிருக்கின்றார்கள். அவர்களின் கல்வி வெற்றிக்கு காரணத்தைக் கேட்டால் சித்திரம் வரைதல், நாடகம் நடித்தல், இசைக்கருவிகளை வாசித்தல் போன்ற வற்றினால் எனது மனம் பாடங்களை படிப்பதற்கும் மனனம் செய்வதற்கும் அவற்றை நினைவில் வைத்து பரீட்சையில் எழுதுவதற்கும் உதவியதனைக் கூறுவார்கள். அப்படியெனில் கலை எப்படி கல்வியில் பாதிக்கும். என்னைப்பொறுத்தவரை கலை இன்றி கல்வி இல்லை என்றே கூறுவேன்.

**✦ அன்று நாடகத்திற்கு இருந்த ரசிகர் உலகு போன்று இன்று இல்லையே காரணம்?**

முன்பெல்லாம் நாடகங்களை பார்ப்பதற்கு கூட்டம் நிறையக் கூடும். அப்போது என்ன செய்தி சொல்வதென்றாலும் அதை நாடகத்தினூடாக மக்களுக்குச் சொல்லக் கூடிய வகையில் இருந்தது. அந்தளவுக்கு நாடகங்களை மக்கள் விரும்பினார்கள். இன்று சினிமா மோகம், சின்னத்திரை தொடர் நாடக மோகம் என எம் பண்பாடு கலாசாரத்தை அழித்துக் கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம் நாடக நடிகரை மதித்து மரியாதை தரும் காலம். இப்போது நாடகம் நடிப்பவரை சமூகத்தில் மதிப்பது குறைவு.

வேலை வெட்டி இல்லாமல் நாடகம் நடிக்கிறார்கள் என பேசும் நிலையே உள்ளது.

இன்று போதை, வாள்வெட்டு, கொலை, கொள்ளை போன்ற சமூகப் பிறழ்வுக்குக் காரணம் எமது பண்பாடு கலாசாரங்களுடன் நாம் ஒன்றி வாழாமல் விடுபட்டு சினிமா மோகத்தில் கட்டுண்டு கிடப்பதனாலேயே என இவ்விடத்தில் பதிவு செய்கிறேன்.

**✦ தங்களின் கலைத்துறைக்குக் கிடைத்த பாராட்டுக்கள்?**

நான் கலைத்துறையில் பெற்ற பட்டங்கள், பாராட்டுக்கள். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் கௌரவிக்கப்பட்டேன்.

- திருமறைக் கலாமன்றம் "மரபுக் கலைச் சுடர்"
- நுண்கலைத் துறையும் கலைவட்ட மும் "முதுஷம்"
- கைலாசபதி கலையரங்கம் வஸந்தி கான சபாவின் முக்கியநடிகருக்கான கௌரவம்
- ஸ்ரீரங்க கானசபா "நகைச்சுவை வேந்தன்"
- வலிவடக்கு கலாசாரப் பேரவை, "கலைச் சுடர்"
- கலாசார அலுவல்கள் திணைக்களம் கௌரவிப்பு
- கரவெட்டி கோவிற்கடவை பிள்ளை யார் கோவில் "விகடமணி"

**✦ தங்களின் உடுக்குத் துறை பற்றி?**

உடுக்கு என்பது சிவனுக்கு பிடித்த வாத்தியம். சிவன் கையில் எப்போதும் உடுக்கை இருக்கும்.

சிறு வயதிலிருந்தே எனக்கு உடுக்கை இசைக்க மிக விருப்பம். எனக்கு உடுக்கையைக் கற்றுத் தந்து குருவாகத் திகழ்பவர் மல்லாகம் சின்னத்துரை அவர்கள். அவர் ஒரு நாடறிந்த உடுக்குக் கலைஞர். குடா நாட்டில் பல பாகங்களிலுள்ள ஆலய நிகழ்வுகளில் அவரின் உடுக்கை நாதம் ஒலித்துக் கொண்டே இருக்கும். அவரை குருவாகப் பெற்றது நான் பெற்ற பேறே.

**✦ கலையுலகில் மறக்க முடியாத அனுபவம்?**

என்னை இந் நிலைக்கு உயர்த்தி வைத்த நடிகமணி வி.வி.வைரமுத்து ஐயா அவர்களுடன் இணைந்து நடித்ததை என்னால் மறக்க முடியாது.

என் வாழ்நாளில் நான் செய்த சாதனைகளில் அதுவே முதன்மையானது.

உலகறிந்த ஒரு உன்னத கலைஞனுடன் ஒரே மேடையில் நின்று நடித்ததை நினைக்கும் போது எனது கண்களில் கண்ணீர் சொரிகிறது. அதை விட நான் எதையும் சாதித்ததாகக் கருதவில்லை. அந்த பாக்கியத்தைத் தந்த அந்த ஆண்டவனுக்கு நன்றி கூறுகிறேன்.

**✦ கலையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

இச் சந்தர்ப்பத்தில் எமது பாரம்பரிய கலைகளை அழிய விடாது எமது எதிர்காலச் சந்ததியினரும் கற்றுத் தேறவும் உலகுள்ளவரை தமிழ்க்கலையை வாழ வைக்கவும் சகல இளம் கலைஞர்களும் தங்களாலான பங்களிப்பினை ஊக்கத்துடன் தொடர வேண்டுமென கேட்பதுடன் எமது பண்பாடு, கலாசாரங்களை அழிய விடாது அவற்றை அடுத்த சந்ததிக்கு கையளிக்க பெரியவராகிய நாம் தான் முன்வர வேண்டும். அதை சரியாகச் செய்தால் எமது பண்பாடு கலாசாரத்திற்கும் கலைக்கும் அழிவே கிடையாது.



**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# அவசரகால நிலைமை ஆரம்ப நடவடிக்கையே

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

கடுமையான தீர்மானங்களை எடுத்து அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும், அதன் ஒரு ஆரம்ப கட்டமே முன்னெடுக்கப்பட்டது எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்த தீர்மானம் குறித்து கொழும்பு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்கும் விதத்தில் யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக எந்தவித தராதரங்களும் பார்க்காமல் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பேரினவாத வன்முறையாளர்கள் தண்டிக்கப்பட்டதாக வரலாறில்லை

## நாடாளுமன்றில் சுமந்திரன் குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமையே இன வெறித் தாக்குதல்கள் தொடர்கின்றமைக்கு காரணம் எனவும் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை இழந்து விடுவோம் என்ற யதார்த்தத்திற்கு புறம்பான அச்சம் காரணமாக அவ்வப்போது ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க தயங்குவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டினார்.

அம்பாறை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை சம்பவங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போது முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற நிலை சுதந்திர இலங்கையில் புதிய விடயமல்ல. காலத்துக்குக்காலம் சிறுபான்மை சமூகத்திற்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வன்முறையாளர்கள் தண்டிக்கப்பட்டிருக்கவில்லை.


அதுவே இவ்வாறான வன்முறைகள் தொடர்வதற்கு காரணமாக இருக்கின்றது.

பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் சிறு பிரிவினராக இருக்கின்ற இனவாதிகள் கட்டுப்படுத்தப்படாதவரை, பேரினவாத சிந்தனை தொடர்பில் அடிப்படை மாற்றம் ஏற்படுத்தப்படாமல், சிறுபான்மை மக்கள் மத்தியில் தாங்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்கின்றோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியாது எனச் சுட்டிக்காட்டினார்.

மேலும், தற்போதைய அரசாங்கம் குறுகிய அரசியல் நலன்களை பொருட்படுத்தாமல் தேவையான நடவடிக்கைகளை சரியான முறையில் எடுக்க தவறுமாயின் நாட்டை ஆட்சி செய்கின்ற தகுதியை இழக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஊரடங்கு வேளையிலும் தாக்குதல்கள்

## அதிகாலையில் பற்றியெரிந்த சொத்துக்கள்





(கண்டி)

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை அடுத்து கண்டி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஆங்காங்கே தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மெனிக்கின்ன முஸ்லிம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்த முயன்ற நூற்றுக்கணக்கானோரைக் கொண்ட குழுவின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி தடுத்துள்ளனர்.

அதேவேளை, வத்தேகம பகுதியிலும் முஸ்லிம்களின் சொத்துக்கள் மீது அதிகாலை வேளை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சில வாணிப நிலையங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன.

எனினும் இராணுவத்தினரும் பொலிஸாரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அங்கு சென்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மடவளைப் பிரதேசத்திலும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்த போதியளவு படையினர் இல்லை என்றும், எனவே ஏனைய மாவட்டங்களில் இருந்து 2000 பேரை உடனடியாக அனுப்பி பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் மூலம் படையினருக்கான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ள நிலையிலும், கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வி.சிறிசக்திவேல் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் பொ.தயானந்தன், சிறப்பு விருந்தினராக கணக்காளர் திருமதி. த.தவமன்னன், கௌரவ விருந்தினராக நம்பிக்கை நிதிய மாவட்ட சங்க பிரதிநிதியும் கலந்து கொள்வர். (இ)

# முஸ்லிம் மக்களுக்காக முஸ்லிம் அமைச்சர்கள் பதவிகளை துறப்பார்களா?

## வியாழேந்திரன் எம்.பி. கேள்வி



(கொழும்பு)

இனவாத, மதவாத வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய திட்டத்தை முன்வைக்காவிட்டால் முஸ்லிம் மக்களுக்காக முஸ்லிம் அமைச்சர்கள் பதவிகளை துறப்பார்களா? என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் சவால் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இந்தச் சவாலை விடுத்தார். ஒரு இனம் அழிக்கப்படும்போது ஒரு இனம் சந்தோசப்படும் நிலைமையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்த அவர் கடந்த காலத்தில் தமிழர்கள் அழிக்கப்படும்போது பால் சோறு கொடுத்து மகிழ்ந்ததையும் சுட்டிக்காட்டினார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "கடந்த மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பொதுபலசேனா, ராவணாபலய போன்ற பௌத்த தீவிரவாத அமைப்புக்களுக்கு ஆதரவு வழங்கியதால் தான் இந்நாட்டின் சிறுபான்மை இனமான தமிழ், முஸ்லிம் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பி நல்லாட்சிக்கு வாக்களித்தனர்.

ஆனால் இந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் தொடர்ச்சியாக இனவாத, மதவாத செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. 2017 இல் ஜின்தோட்டையில், 2018 இல் அம்பாறையில் மற்றும் கண்டி என நடைபெற்ற இனவாத சம்பவங்களை நோக்கும்போது சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் நசுக்கப்படுகின்ற நிலையே காணப்படுகின்றது.

அதேவேளை முஸ்லிம் மக்களுக்குத் தலைமை தாங்குகின்ற முஸ்லிம் அரசியல் வாதிகள், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படும் போது இந்த நல்லாட்சி அரசாங்கம் எதிர்வரும் காலங்களில் வன்முறைகளைத் தடுக்கும் திட்டத்தை எதிர்வரும் பாராளுமன்ற அமர்விற்குள் முன்வைக்காவிட்டால் நல்லாட்சிக்கு இவர்கள் வழங்கும் ஆதரவினையும், அமைச்சரவையில் இவர்கள் வகிக்கும் அமைச்சுப்பதவிகளையும் மக்களுக்காக தூக்கி எறிவார்களா? என இவர்களிடம் கேள்வி எழுப்புகின்றேன்.

அத்துடன் இவ்வாறான வன்முறைகளால் அதிகமாக பாதிக்கப்பட்ட இனமாக தமிழ் இனம் காணப்படுகின்றது. கடந்த கால அரசினால் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படும் போது அதை வரவேற்று பால் சோறு கொடுத்து, தேசியக் கொடியை பறக்கவிட்டு சந்தோசமாக கொண்டாடிய வரலாறும் உள்ளது என்பதையும் மறக்க முடியாது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## பா.ஜ.கவை எதிர்க்கும் துணிவு அ.தி.மு.கவினரிடம் இல்லை

### குஷ்பு குற்றச்சாட்டு

(சென்னை)

காங்கிரஸ் தேசிய செய்தித் தொடர்பாளர் குஷ்பு நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

திரிபுராவில் லெனின் சிலை உடைக்கப்பட்டது போல, தமிழகத்தில் பெரியார் சிலை உடைக்கப்படும் என்று பா.ஜ.க. தேசிய நிர்வாகி எச்.ராஜா கூறியிருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன். இன்று பெரியார் சிலைஎன்று கூறுபவர்நாளை வேறொருவரின் சிலை உடைக்கப்படும் என்பார்.



இதுகுறித்து எல்லாம் அ.தி.மு.கவினர் ஒன்றும் சொல்லமாட்டார்கள். ஏனென்றால், பா.ஜ.கவை எதிர்க்கும் தைரியம் அ.தி.மு.கவுக்கு கிடையாது.


அவ்வாறு எதிர்த்தால் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் இருக்க முடியாது.

இது அ.தி.மு.கவினருக்கும் நன்கு தெரியும். 'ஆண்களுக்கு குவாட்டர், பெண்களுக்கு ஸ்கூட்டர்', இது தான் அ.தி.மு.க. ஆட்சி.

தமிழக அரசியலில் வெற்றிடம் இருப்பதாக ரஜினி கூறியிருக்கிறார். இது உண்மைதான்.

தமிழக அரசியலில் தற்போது சரியான தலைமை இல்லை. என குஷ்பு தமிழக அரசியலை குற்றம் சாட்டியுள்ளார். (10)

## காந்தி கொலை வழக்கில் மறுவிசாரணை இல்லை தீர்ப்பை ஒத்திவைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



(டில்லி)

மகாத்மா காந்தி சுடப்பட்ட வழக்கை மறுவிசாரணை நடத்த முடியாது. சட்டப்படி பரிசீலித்து உத்தரவு பிறப்பிப்போம் என்று தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசத் தந்தை மகாத்மா காந்தி 30.1.1948 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக கூறி, மும்பையைச் சேர்ந்த அபினவ் பாரத் அமைப்பின் அறங்காவலர் டாக்டர் பங்கஜ் குமுத் சந்த் பத்னீஸ் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கில் நீதிமன்றத்துக்கு உதவும்படி மூத்த வழக்கறிஞரும் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலுமான அமரேந்திர சரணுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர். அவர் தாக்கல் செய்த அறிக்கையில், 'நாதுராம் கோட்சே தவிர வேறொருவர் மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றார் என்று நம்புவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. நான்காவது குண்டு பாய்ந்ததில் தான் காந்தி கொல்லப்பட்டார் என்ற வாதத்தை நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணை நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்தே மற்றும் எல்.நாகேஸ்வரராவ் அடங்கிய அமர்வு முன்பாக நேற்று முன்தினம் வந்தது. அப்போது நீதிபதிகள், 'கல்வி ஆய்வில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு எப்போதோ முடிந்துவிட்ட ஒரு வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க முடியாது. மக்களுக்கு ஏற்கனவே எல்லா உண்மைகளும் தெரியும். காந்தி கொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் எந்த மாற்றமும் நாங்கள் செய்யப் போவதில்லை. இந்த வழக்கில் உணர்வுபூர்வமாக எதையும் சிந்திக்க வேண்டாம். உங்கள் வாதங்களை கேட்டுள்ளோம். இதில் உணர்வுபூர்வமாக எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது. சட்டப்பூர்வமாக எந்த உத்தரவை பிறப்பிக்க முடியுமோ அதை பிறப்பிப்போம்" என்று தெரிவித்தனர்.

'கல்வி ஆய்வு நடத்தி உண்மையை வெளிக் கொண்டு வருவதை தடுக்கவில்லை.

சட்டப்பூர்வமாக என்ன செய்ய முடியுமோ அதை மட்டுமே. நாங்கள் செய்ய முடியும்.

நீதிமன்றத்தில் முன் வைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் இறுதி உத் தரவு பிறப்பிக்கப்படும்' என்று நீதிபதிகள் தெரிவித்து வழக்கின் தீர்ப்புத் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர். (10)

## உலகப் பணக்காரர்கள் பட்டியலில் அமேசான் நிறுவுநர் ஜெப் முதலிடம்

(வோஷிங்டன்)

உலக பணக்காரர்களுக்கான போர்ப்ஸ் பட்டியலில் அமேசான் நிறுவுநர் ஜெப் பீசாஸ் முதலிடத்தை பிடித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் போர்ப்ஸ் பத்திரிகை,

ஒவ்வொரு ஆண்டும் உலக பணக்காரர்களின் பட்டியலை இந்த பத்திரிகை வெளியிட்டு வருகிறது. இந்தப் பட்டியலுக்கு பிஸினஸ் உலகில் ஏகப்பட்ட எதிர்பார்ப்புள்ளது.



இந்நிலையில், 2018 ஆம் ஆண்டுக்கான உலக பணக் காரர்களின் பெயர் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதில் முதல் இடத்தை பிடித்துள்ளது அமேசான் நிறுவுநர் ஜெப் பீசாஸ். இவரது சொத்து மதிப்பு 120 பில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவரை தொடர்ந்து, மைக்ரோ சொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். இவரது சொத்து மதிப்பு 90 பில்லியன் டொலர் ஆகும்.

கடந்த ஆண்டு 544-வது இடத்தில் இருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்த ஆண்டு 200 இடங்கள் பின்தங்கி 766-வது இடத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## சிரிய கடற்பரப்பி… ரஷ்ய சரக்கு வி…

(மொஸ்கோ)

சிரியாவில் கடற்பரப்பில் விமான விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது என ரஷ்ய நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு போரில் ஜனாதிபதிக்கு ஆதரவாக ரஷ்ய ராணுவம் சண்டையிட்டு வருகிறது. இதற்கிடையே, சிரியாவின் லடாகியா மாகாணத்தில் உள்ள ஹேமிமிம்



விமான படைத்தளத்திற்கு சென்ற ரஷ்ய விமானம் விபத்தில் சிக்கியது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக செய்திகள் தெரிவிப்பதாக அந்நாட்டு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டன.

விசாரணையில், தொழில்நுட்ப

## பாகிஸ்தான் சலூன்களில் பஷன் தாடிக்கு தடை

(பெஷாவர்)

பாகிஸ்தானில் தாடியை பஷனாக வெட்ட முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இளைஞர்கள் 'ஸ்டைல்' ஆக பல 'பஷன்'களில் தாடி வளர்க்கின்றனர். அதற்காக அங்குள்ள சலூன்களுக்கு சென்று சீரமைத்து கொள்கின்றனர்.

ஆனால் பக்துன்கவா மாகாணத்தில் தாடியை பஷனாக வெட்ட முடிதிருத் தும் தொழிலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெஷாவரில் முடி திருத்தும் தொழிலாளர்கள் சங்க மாநாடு நடந்தது. அதில் இத்தகைய தீர்மானம் கொண்டு வந்து நிறை வேற்றப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தலிபான் தீவிரவாதிகளின் ஆதிக்கம் இருந்தது. அப்போது 'பஷன்' ஆக தாடி வளர்க்கவும் அதை முடி திருத்தும் தொழிலாளர்கள் வெட்டி சீரமைக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தலிபான்களின் ஆதிக்கம் முடிவுக்கு வந்த நிலையிலும் தற்போது அங்கு இதுபோன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே அங்கு மீண்டும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

'பஷன் தாடி வளர்ப்பது இஸ்லாமிய சட்டத்துக்கு எதிரானது என்பதால் தான் இத்தகைய நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (10)

## திரிபுராவில் லெ… மேற்கு வங்கத்தி…

(டெல்லி)

திரிபுராவில் பெலோனியா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இயக்குநர் லெனினின் சிலை உடைக்கப்பட்டதை கண்டித்து பிரதமருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் வெடித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த சிலை உடைக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கு வங்களாவில் நேற்று இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பிரதமர் மோடிக்கு எதிரான கோஷங்களை எழுப்பியும், பா.ஜ.க. ஆட்சியினர் மற்றும் பிரதமர் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.



நடந்து முடிந்த மூன்று மாநிலங்களைத் தேர்தலில் திரிபுராவில் 25ஆண்டு காலம் ஆட்சியில் இருந்த கம்மியூனிஸ்ட் கட்சியை வீழ்த்தி பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துள்ளது.

இதனால் பா.ஜ.க. மற்றும் கம்யூ

# வெளிநாடு



# ...ப்பில் வெடித்து சிதறிய விமானம்; 39 பேர் பலி!



கோளாறு காரணமாக விபத்து நேரிட்டு இருக்கும் என தகவல்கள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 26 பயணிகள், 6 பணியாளர்கள் என மொத்தம் 39 பேர் உயிரிழந்தனர் என தெரிய வந்தது.

இந்நிலையில், சிரியாவில் நடைபெற்ற விமான விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது என ரஷ்ய நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

விமான விபத்து தொடர்பாக அரசு அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 33 பயணிகள் மற்றும் விமான நிறுவன ஊழியர்கள் 6 பேர் என மொத்தம் 39 பேர் பலியாகியுள்ளனர் எனவும் குறித்த தகவலை அரசு உறுதிப்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளனர். (10)

## மியன்மாரில் தொடரும் இன அழிப்பு ஐக்கிய நாடுகள் சபை குற்றச்சாட்டு

(யாங்கூன்)

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பு தொடர்கிறது என்று ஐ.நா. மனித உரிமை சபை தெரிவித்துள்ளது.

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. சுமார் 7 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் வங்கதேசத்துக்கு அகதிகளாக சென்றுள்ளனர். அங்குள்ள அகதிகள் முகாம்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது. தொடர்ந்து ஏராளமான அகதிகள் வந்தவண்ணம் உள்ளனர். புதிதாக வந்த அகதிகள் குழுவை ஐ.நா. சபையின் மனிதவுரிமைகளுக்கான அமைப்பின் துணை பொதுச் செயலாளர் ஆண்ட்ரூ கிளிமோர் பார்த்தார். அப்போது அகதிகளிடம் அவர் பேசியதாவது,



மியன்மார் நாட்டில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தீவிரவாதம் என்ற பிரசாரம் மூலமும் தேவையான உணவுப் பொருட்கள் கிடைக்காமலும் செய்து ரோஹிஞ்யா முஸ்லிம்கள் வலுக்கட்டாயமாக வெளியேற வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மியன்மார் அரசு அகதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்வதாகத் தெரிவித்தாலும் ராணுவம் அவர்களை வெளியேற்றி வருகிறது.

இப்போதுள்ள சூழலில் அகதிகள் தங்கள் நாட்டுக்குத் திரும்ப வாய்ப்பில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# லெனின் சிலை உடைப்பு ...த்தில் வெடித்தது கலவரம்



...னிஸ்ட் கட்சியனருக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை காரணமாக கலவரம் வெடித்தது. இக்கலவரத்தில் 11பேர் உயிரிழந்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து லெனின் சிலை உடைக்கப்பட்டது. இச்சம்பவம் கமியூனிஸ்ட் கட்சியினரிடம் பெரும் கோபத்தை ஏற்படுத்தியதால் மீண்டும் நேற்று கலவரம் மற்றும் ஆர்ப்பாட்டம் என்பன உருவெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் திரிபுரா எங்கும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைவடைந்துள்ளதோடு பதற்றமான நிலைமை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)




# ஏவுகணை சோதனை இனி இல்லையாம் கிம் ஜாங் உன்னின் திடீர் மனமாற்றம்



(பியாங்யாங்)

சமாதான பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வடகொரியா சென்றுள்ள தென்கொரிய பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

உலக நாடுகளின் எதிர்ப்புகளை மீறியும் வடகொரிய அரசு தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதனால், அந்த நாட்டின் மீது ஐ.நா. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன. எனினும், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஏவுகணை சோதனைகள் எதுவும் வடகொரியா நடத்தவில்லை.

இந்நிலையில் கடந்த மாதம் தென்கொரியாவில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வடகொரியா தனது வீரர்கள், வீராங்கனைகளை அனுப்பி வைத்தது. இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே பதற்றம் சற்றே தணிந்தது.

நீண்ட நாட்களாக இருந்த பகையை முடிவுக்கு கொண்டு வரும் இரண்டாவது முன்னேற்ற நடவடிக்கையாக, வடகொரிய ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இயூய்-யாங் தலைமையிலான பத்து அதிகாரிகள் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் வடகொரியா சென்று ஜனாதிபதி கிம் ஜாங் உன்-ஐ சந்தித்து பேசினர்.

அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து இந்த சந்திப்பில் தென்கொரிய பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கிம் விருப்பம் தெரிவித்ததாகவும் ஆனால், அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒதுக்க அமெரிக்கா கோரிக்கை விடக்கூடாது என அவர் நிபந்தனைகள் விதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பின் முன்னேற்ற நடவடிக்கையாக அடுத்த மாதம் இரு நாட்டு தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு தலைவர்கள் நேரிடையாக பேசும் ஹொட்லைன் வசதியை ஏற்படுத்துவது குறித்தும் முடிவு எடுக்கப்பட்டது. சந்திப்பை அடுத்து தென்கொரிய பிரதிநிதிகளுக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் இரவு விருந்து அளித்துள்ளார். இந்த விருந்தில் கிம்மின் மனைவி, சகோதரி ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

அப்போது, ஏவுகணை சோதனைகள் இனி அதிகம் இருக்காது என கிம் கூறியதாக தென்கொரிய பத்திரிக்கைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அவர் திடீரென மனம் மாறியுள்ளது தென்கொரியாவை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## இஸ்ரேல் செல்லும் ஏர் இந்திய விமானங்கள் சவுதி வான்பரப்பை பயன்படுத்த அனுமதி

(ரியாத்)

இஸ்ரேலுக்குச் செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் சவுதி வான்வெளியைப் பயன்படுத்தலாம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கும் போது, "இஸ்ரேலுக்கு செல்லும் ஏர் இந்தியா விமானங்கள் சவுதி வான்வெளியைப் பயன்படுத்துவதற்கு வசதியாக ஏர் இந்தியா, சவுதி அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் இந்தியா-இஸ்ரேல் இடையேயான பயண நேரம் இரண்டரை மணி நேரம் குறையும்.

டில்லி - டெல் அவிவ் இடையேயான ஏர் இந்தியா விமானச் சேவை அடுத்த சில வாரங்களில் தொடங்கவுள்ளது. இதுவரை இஸ்ரேலிலிருந்து வரும் ஏனைய நாட்டு விமானங்களையும், சவுதி அரேபியா மீது பறப்பதற்கு அந்த அரசு அனுமதி அளித்திருக்கவில்லை. இந்த நிலையில்தான் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதனால் டில்லி - டெல் அவிவ் இடையேயான பயண நேரம் 8 மணி நேரத்திலிருந்து ஐந்தரை மணி நேரமாக குறையவுள்ளது.

ஏர் இந்தியாவுக்கு, சவுதி வான்வெளியைப் பயன்படுத்த அனுமதி கிடைத்துள்ளதால், இஸ்ரேலின் தேசிய விமானச் சேவை நிறுவனமான இஏ1 நிறுவனத்துக்கு பாதிப்பு ஏற்படும். அந்த நிறுவனம் பொருளாதார ரீதியாக பாதிப்பு ஏற்படாதிருக்க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்" என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக டில்லியிலுள்ள ஏர் இந்திய நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர்களில் ஒருவர் தெரிவிக்கையில், "சவுதி அரேபிய வான்வெளியை பயன்படுத்துவதற்கு ஏர் இந்தியாவுக்கு அனுமதி கிடைத்துள்ளதாக எங்களுக்கு இதுவரை எந்தத் தகவலும் வரவில்லை" என ஏர் இந்தியா நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (10)

# வன்முறைகளைக் கண்டித்து மனித சங்கிலிப் போராட்டம்









(ஏறாவூர்)

முஸ்லிம் சமூகத்திற்கெதிராக அம்பாறை, கண்டி மாவட்டத்தின் திகன, தெல்தெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களில் தூண்டி விடப்பட்டுள்ள வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகர பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் மற்றும் ஜம்மிய்யத்துல் உலமா சபையின் அழைப்பின் பேரில் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் கலந்து கொண்டோர் இந்த நாட்டின் சுதந்திரம், பொருளாதாரம், பாதுகாப்பு உட்பட தொன்று தொட்டு முஸ்லிம்கள் ஆற்றி வரும் பங்களிப்பு குறித்தும் மற்றும் சகல இனங்களுக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் சமத்துவமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் சட்டம் ஒழுங்கு பாகுபாடின்றி நிலைநாட்டப்பட வேண்டியதை வலியுறுத்தியும் பதாகைகள் ஏந்தியிருந்தனர்.

முன்னதாக மனித சங்கிலிப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக சில மணித்தியாலங்கள் கடைகளை மூடிவைக்குமாறும் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை ஏறாவூரில் மனித சங்கிலிப் போராட்டம் அனுஷ்டிக்கப்பட்ட போதும் அரச அலுவலங்கள், பாடசாலைகள், உள்ளூர் மற்றும் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் என்பன வழமைபோல் இயங்கின.

பிரதேசத்தில் வன்முறைகள் ஏதும் நிகழாவண்ணம் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (இ-7)

# மதுபோதையில் மாட்டிறைச்சி உண்ணக் கேட்கும் பௌத்தர்களை என்ன செய்யலாம்?-அநுர கேள்வி



(கொழும்பு)

மதுபோதையில் மாட்டிறைச்சி உட்கொள்ளக் கேட்கும் பௌத்தர்களை என்ன செய்யலாம் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனவாத முரண்பாடுகள், மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திகண சம்பவத்தில் உயிரிழந்த குமாரசிங்கவின் குடும்பத்திற்கும் அப்துல் பாஸித்தின் குடும்பத்திற்கும் ஆழ்ந்த இரங்கல்கள். இனவாத முரண்பாடுகளை முறியடிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தேசிய சமாதானத்தை தோற்கடித்து இனவாதக் கொள்கைகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. சிங்கள, முஸ்லிம்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த சில அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன.

இன முரண்பாடுகள் எந்தவொரு இன சமூகத்திற்கும் நன்மையை ஏற்படுத்தப் போவதில்லை. அதிகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளவர்கள் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவும், அதிகாரத்தில் இல்லாதவர்கள் அதிகாரத்திற்கு வரவும் இவ்வாறு இன பேதங்களை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த அரசாங்கம் தோல்வியடைந்த ஓர் இராச்சியமாக மாற்றமடைந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் அரசாங்கம் பிரதமர் பதவி குறித்தும் சில அமைச்சுப் பதவிகள் குறித்துமே கவனம் செலுத்தி வந்தது.

மதுபானம் அருந்தி மாட்டிறைச்சி கொத்து ரொட்டி வழங்குமாறு கோரி நிற்கும் பௌத்தர்களை அழிக்கத்தான் வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது அரசாங்கத்திற்கு நன்மையளிக்கும், மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்த முடியும்.

அரசாங்கம் மட்டுமன்றி, தோல்வியடைந்த தரப்புக்களும் இனவாத அப்படையில் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கின்றன என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆர்ப்பாட்டத்தை கைவிட்டார் ஆறுமுகன் தொண்டமான்





(ஹற்றன்)

மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டிரோன். ரத்நாயக்கவை இடமாற்றம் செய்யக் கோரி மஸ்கெலியா அப்கட் பிரதான வீதியை மறித்து செய்யப்பட்ட வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.காவின் தலைவரும், பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் கலந்துகொண்ட இந்த வீதி மறியல் போராட்டம் இ.தொ.காவின் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

கட்சி சார்பாக தமது அரசாங்க தொழிலை துஷ்பிரயோகம் செய்வதாக இ.தொ.காவின் ஆதரவாளர்கள் கொடுத்த புகாருக்கு அமைவாகவே இந்த வீதி மறியல் போராட்டம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சுமார் 2 மணி நேரமாக பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், அட்டன் பொலிஸ் தலைமையகத்திலிருந்து பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து ஆறுமுகன் தொண்டமானின் கோரிக்கையை ஏற்று உடனடியாக மேல்மட்ட நடவடிக்கையை மேற்கொள்வதாக கூறிய உத்தரவாதத்திற்கு அமைவாக இந்த வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தூங்குபவர்களை எழுப்பும் முறை

இதெல்லாம் ஒரு தலைப்பு என்று எடுத்துக் கொண்டு எழுதுவதாவது? என்று சண்டைக்கு வரமாட்டீர்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தூங்குபவர்களை எரிச்சலூட்டாமல் எழுப்ப முடியுமானால் அது மிக நல்லது.

சிலர் ஏய் எழுந்திரிடி எழுந்திரடா மணி என்னாச்சுப் பாரு! கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா உனக்கு? அப்படியென்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு என்று ஆரம்பித்து பெரிய வசை புராணமே பாடுவார்கள். காலையில் எழுந்ததும் அவர்கள் காதில் நல்ல வார்த்தைகள் விழுவது அவசியம். நண்பர்களை எழுப்பும் போது குட்மோர்னிங் சொல்லி எழுப்புவது நல்லது.

காலையில் 6 மணிக்கு எப்போதும் ஒரு திருமணத்திற்குப் போக வேண்டும். 5 மணிக்கு எழுந்தால்தானே இது சாத்தியம்? 5 மணிக்கு எல்லோராலும் எழுந்திருக்க முடியுமா? கஷ்டம் முதலில் ஒருவர் எழுந்து தயாராகிவிட்டு விளக்கைப் போட்டு பானை நிறுத்திவிட வேண்டும். இப்போது தூக்கம் மெல்லக் கலைய ஆரம்பித்துவிடும். அதன் பின்னும் தூங்குபவர்கள் இருக்கிறார்கள் என்பது வேறு விடயம். ஆனால் அவர்களை எழுப்ப நாம் 20 சதவித ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம் என்பது மட்டும் உண்மை.

ஒருவர் எழுப்பப்படுவதற்கு அரை மணி அல்லது கால்மணி நேரம் முன்னதாக அவர்களைத் தட்டி எழுப்பி இன்னும் கொஞ்ச நேரத்தில் எழுந்திருக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போட அனுமதிப்பதும் நல்ல உத்தி. இப்போதே எழுந்திரு என்று சொன்னால் எவருக்கும் எரிச்சல் வரும்.

பெண்களை ஆண்கள் எழுப்பும் போது ரொம்பவும் உரிமை இருந்தாலொழிய காலைத் தட்டியே எழுப்ப வேண்டும். சில பேர் இடுப்பைத் தொட்டு எழுப்புகின்றார்கள். அது சரியல்ல.

குழந்தைகளை எழுப்பும் போது அவர்களின் பிறந்த நாளின் போதோ அவர்களின் கன்னத்தில் முத்தமிட்டு அவர்களை எழுப்ப வேண்டும். சங்கடப்படாதபடி அவர்களை எழுப்ப இதுவே நல்ல வழி.

சோகச் செய்தி சொல்லி எழுப்ப வேண்டிய சூழ்நிலை உருவானால் எடுத்த எடுப்பில் "உன் பையனுக்கு ஆக்சிடண்டாம்", "உங்கப்பா செத்துட்டாங்க" என்றெல்லாம் கத்தி அவர்களை எழுப்பக் கூடாது.

கொஞ்சம் எழுந்திருங்க. உங்கக் கிட்ட ஒரு முக்கியமான செய்தி சொல்லணும். தூக்கம் கலைஞ்சதும் சொல்லுறேங்க. விடயத்தை விரிவாச் சொல்றேன் என்று ஆரம்பிக்க வேண்டும்.

உடல் நலத்திற்கும் உலகத் துன்பங்களை மறக்கவும் கவலைகளை வெல்லவும் களைப்புத்தீரவும் தரப்பட்ட இயற்கை தந்த பெரும் வரப்பிரசாதம் தான் தூக்கம். எனவே மற்றவர்களின் தூக்கத்தைக் கிள்ளுக்கீரையாக இனியேனும் நினைக்க வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**

# அச்சுறுத்தும் வகையில் வெடிபொருள் மீட்பு; ஆரையம்பதியில் பெரும் பதற்றம்!

## முப்படையும் வரவழைப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஆரையம்பதியிலுள்ள வீடொன்றில் அச்சுறுத்தும் வகையில் வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் நேற்றுக் காலை முதல்பெரும்பதற்றம்நிலவியது.

ஆரையம்பதியில் தாயும் மகளும் தங்கியிருந்த வீடொன்றில் இருந்து குறித்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு முப்படையினரும் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வீட்டின் வேலியொன்றில் தீவிரவாத அமைப்பொன்றின் வாசகம் எழுதப்பட்ட சுலோக அட்டையொன்றும் தொங்கவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு பொலிஸாரால் 30பேர் கைது!

(அம்பாறை)

அம்பாறை நகரில் தாண்டவமாடிய இனவாதம் கண்டி தெல்தெனிய மற்றும் திகன ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் மதவாதமாக உருவெடுத்து சேதங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தி பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்திருந்தது.

இந்நிலையில் முஸ்லிம்கள் மீதான இனவாத, மதவாத தாக்குதல்களைக் கண்டித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் முஸ்லிம் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை ஹர்த்தால் நடவடிக்கையுடன் வீதித் தடை, ரயர் எரிப்பு மற்றும் பேருந்துகளுக்கு கல்வீச்சு போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற பேரில் மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 பேர்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சாய்ந்தமருது பிரதேசத்தில் குழப்பங்களை விளைவித்தார்கள் என்ற பேரில் செயற்பட்ட பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு குழப்பம் விளைவித்தோரை கலைத்தனர். அத்துடன் 30பேரை கைது செய்தனர். பொலிஸார் எட்டு மோட்டார் சைக்கிள்களையும் ஏழு துவிச்சக்கரவண்டிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

அம்பாறை நகர் பள்ளிவாசல் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது நடத்தப்பட்ட திட்டமிடப்பட்ட இனவாத தாக்குதல் துயர்குறைவதற்குமுதலே கண்டி திகன பகுதியில் 4 பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டதுடன் வர்த்தக நிலையங்கள், வீடுகள் தாக்கி எரிக்கப்பட்டுள்ளன.

இதன் எதிரொலியாகவே அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை இந்த மாவட்டத்தின் சில முஸ்லிம் பிரதேசங்களில் குறிப்பாக கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் பிரதேசங்களில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவிலேயே ஹர்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னணியில் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது, நிந்தவூர், மருதமுனை, கல்முனை உள்ளிட்ட பிரதேசங்களிலும் மட்டக்களப்பில் காத்தான்குடியிலும் நேற்று முன்தினம் முழு கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அரச அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள், தனியார் அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டும் இளைஞர்கள், பொது மக்கள் வீதிகளில் திரண்டும் பெரும் கொந்தளிப்பு நிலைமை காணப்பட்டது. பாடசாலைகள் திறக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்கள் வருகை தரவில்லை.

சில பிரதேசங்களில் வெள்ளை, கறுப்பு கொடிகளைப் பறக்கவிட்டும், வீதிகளில் டயர்களை எரித்தும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள் தமது ஆக்ரோஷ உணர்வுகளை வெளிப்படுத்தினர். அத்துடன் முகத்தை மறைத்து துணிகளால் கட்டியிருந்த இளைஞர்கள் ரயர்களை வீதியில் போட்டு எரித்தனர்.

இதேவேளை போக்குவரத்திற்கு இடையூறின்றி அமைதியான முறையில் ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் அறிவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மருதமுனை பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பேருந்துகள் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் கண்ணாடிகள் உடைந்த நிலையில் குறித்த பேருந்துகள் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து கல்முனையில் இருந்து மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் அக்கரைப்பற்றுக்கான பேருந்து போக்குவரத்துகள் இடம் பெறவில்லை.

அதேவேளை மருதமுனையில் கல்முனை - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ரயர்கள் எரிக்கப்பட்டும் மரக்குற்றிகள் மற்றும் கொங்கிறீட் தூண்கள் போடப்பட்டும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டிருந்தது. அத்துடன் அங்கு இளைஞர்கள் ஒன்றுதிரண்டு கண்டனப் பேரணி ஒன்றையும் நடத்தினர்.

### மருதமுனையில் கண்ணீர்ப்புகை

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை கலைப்பதற்காக விசேட அதிரடிப்படையினரால் கண்ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருந்திரளான இளைஞர்கள் அங்கு திரண்டு கண்டனப் பேரணியை நடத்தியதுடன் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை கலைப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சி பயனளிக்காமையினால் விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் கண்ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வேண்டி விஷேட இறை பிரார்த்தனை நிகழ்வு, அட்டாளைச்சேனை ஜும்மா பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மௌலவி எம்.எஸ். எம்.பாஹிம் (ஹமைதி) பிரார்த்தனையை நடத்தினார். இந்நிகழ்வில் அதிகளவிலான பொது மக்கள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. கேந்திர முக்கியத்துவமிக்க இடங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார், கலகம் அடக்கும் பொலிஸார், விஷேட அதிரடிப் படையினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விஷேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### தமிழ் இளைஞன் மீது தாக்குதல்

இதேவேளை தொழில் நிமித்தம் அக்கரைப்பற்று சந்தைக்குச் சென்ற தமிழ் இளைஞர் ஒருவர் முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

ஹர்த்தால் காரணமாக பணிக்கு சமுகமளிக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தும் முகமாக ஹர்த்தால் நடவடிக்கையை புகைப்படம் எடுத்த போது முஸ்லிம் இளைஞர்கள் சிலர் அவர்மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதன்போது பொலிஸார் தலையிட்டதுடன் பள்ளிவாசல் நிர்வாகிகள் சம்பவத்துக்கு குறித்த இளைஞனிடம் மன்னிப்புக் கோரியதையடுத்து பதற்றநிலை தணிந்தது. (இ-7)

# அம்பாறை-திகன வன்முறைகளை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கவும்

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை



(கொழும்பு)

அம்பாறை மற்றும் திகன சம்பவங்கள் தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைக்குமாறும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக நட்ட ஈடு மற்றும் நிவாரணம் என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். (இ-7)

# பௌத்தர்கள் மன்னிப்புக் கோர வேண்டும்

# பொலிஸ் அதிகாரிகளின் அசமந்தமே வன்முறைகள் அதிகரிக்கக் காரணம்

## அமைச்சர் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

தெல்தெனிய, திகன பகுதிகளில் நடந்த வன்முறைகள் தொடர்பாக முஸ்லிம்களிடம் பௌத்தர்கள் மன்னிப்புக் கோர வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என அமைச்சரும் நாடாளுமன்ற அவைத் தலைவருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், "திகன, தெல்தெனிய சம்பவங்களின் விளைவாக அரச புலனாய்வுச் சேவைகள் வீழ்ந்து விட்டன.

சில வெளிநபர்களால் தான் இந்த நிலை உருவாக்கப்பட்டது.

அவர்கள் எந்தப் பகுதியில் இருந்து வந்தார்கள் என்பது பொலிஸாருக்குத் தெரியும். அது பற்றி எமக்கும் கூடத் தெரியும்.

ஆனால் ஏற்படவிருந்த வன்முறைகள் பற்றி பொலிஸ் உயர் அதிகாரிகள் இருட்டில் இருந்தனர்.

மதத் தலைவர்கள் இந்த விவகாரம் குறித்துப் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருந்தனர். சில வர்த்தகர்கள், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கவும் முன்வந்தனர்.

ஆனால் வெளியில் இருந்து வந்த சிலர் அந்த முயற்சிகளை குழப்பி வன்முறைகளைத் தூண்டி விட்டனர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழ் இளைஞர்கள் போன்று முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதத்தைத் தூக்கும் நிர்ப்பந்தத்தை அரசாங்கம் உருவாக்கி விடக்கூடாது



## அமைச்சர் றிசாத் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தினதும், பொலிஸாரினதும் பாதுகாப்பில் நம்பிக்கை இழந்ததால், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி அரசுக்கு எதிராக போராடியது போன்று, முஸ்லிம் இளைஞர்களும் ஆயுதத்தைத் தூக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கம் உருவாக்கி விடக்கூடாது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர், அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மத ஸ்தலங்களையும் சொத்துக்களையும் நாசமாக்கும் காடையர்களுக்கு வழங்கும் தண்டனை மூலம் இனி ஒருபோதும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்ற வகையில் அரசாங்கம் அம்பாறை மற்றும் திகன சம்பவங்களில் சம்பந்தப்பட்ட காவாலிகளுக்கும் காடையர்களுக்கும் அதிகபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். தெல்தெனியவில் குமாரசிறி என்ற அப்பாவி ஒருவரின் மரணத்துக்குக் காரணமான முஸ்லிம் பெயரை தாங்கிய குடிகாரர்களின் செயலுக்காக அப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்களை பழிவாங்கிய காடையர்களை எதுவித தயவு தாட்சண்யமுமின்றி சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்காத வரை, முஸ்லிம்கள் இந்த நல்லாட்சியில் நம்பிக்கை வைக்கப் போவதில்லை.

கண்டி, திகன, கட்டுகஸ்தோட்டை பிரதேசங்களுக்கு நாங்கள் சென்றிருந்த போது இன்னும் அரசுடன் ஒட்டிக் கொண்டிருப்பது வெட்கமில்லையா என அவர்கள் எம்மிடம் கேட்கும் போது நாம் எதைத்தான் கூறுவது?

தெல்தெனியவில் மரணமானவரின் இறுதிச்சடங்குகள் நடைபெறும் நாளன்று அங்கு இனவாதிகளால் பாரிய அசம்பாவிதங்கள் நிகழ்த்தப்பட வாய்ப்புண்டு என நாங்கள் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம்.

பொலிஸாரும் அதிரடிப் படையினரும் போதுமான ளவு குவிக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் எமக்கு உறுதி மொழி வழங்கப்பட்ட போதும் அவை எல்லாம் பொய்ப்பிக்கப்பட்டு ஓர் இன சங்காரமே நடந்து முடிந்திருக்கின்றது.

தெல்தெனிய சம்பவத்தில் அந்த ஊரில் வாழும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் புரிந்துணர்வுடன் சமாதானமாகி பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு 15 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது. எனினும், மஹாசொன் பலகாய என்ற இனவாத இயக்கத்தைச் சேர்ந்த அமித் வீரசிறி மற்றும் மட்டக்களப்பில் பௌத்த தர்மங்களுக்கு மாற்றமாக நடந்து கொள்ளும் மதகுரு ஒருவரும் சேர்ந்தே இந்த அடாவடித்தனத்தை நடத்தி அத்தனை அழிவுகளுக்கும் காரணமாக இருந்திருக்கின்றனர். இவ்வாறான கயவர்களை கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டும்.

முஸ்லிம் பெயர்களைத் தாங்கிய அந்த குடிகார இளைஞர்களுக்கு எவ்வகையான தண்டனையை வழங்கினாலும் முஸ்லிம் சமூகம் அதனை பொருட்படுத்தப்போவதில்லை. ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்து இனவாதிகளை சுதந்திரமாக வீதிகளில் நடமாடச் செய்து காட்டுமிராண்டித்தனத்தை நடத்தி முடித்திருக்கின்றார்கள்.

அதேபோன்று கடந்த வாரம் அம்பாறை நகரில் ஹோட்டல் ஒன்றுக்குள் சென்று உலகத்திலேயே இதுவரை கண்டுபிடிக்கப்படாத மருந்தொன்றை கொத்துரொட்டிக்குள் போட்டதாக அச்சுறுத்தி கூறச் செய்து அதை காரணங்காட்டி அந்த ஹோட்டலை தகர்த்ததுடன் அதற்கு வெகு தொலைவிலிருந்த இரு ஹோட்டல்களை அடித்து நொறுக்கிவிட்டு பள்ளிவாசலையும் முற்றாகச் சேதப்படுத்தினர்.

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்து ஓரிரவு கூட சிறையில் அடைக்காது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட குற்றச்சட்டை வாபஸ் வாங்கி வேறொரு சட்டத்தின் கீழ் அந்த சந்தேகநபர்களின் குற்றங்களை பதிவு செய்து நீதிமன்றத்தில் பிணை வாங்கிக் கொடுத்துள்ளனர். பொலிஸார் ஒருபக்கச் சார்பாகவும் நடந்திருக்கின்றனர்.

பாரபட்சமாக நடந்து கொண்ட அம்பாறை பொலிஸாருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் பிரதமரிடமும் பொலிஸ்மா அதிபரிடமும் வலியுறுத்தினோம். எமக்கு அவ்வாறான உறுதிமொழி வழங்கப்பட்ட போதும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

திகன, பள்ளேகலையில் ஊரடங்குச் சட்ட நேரத்தில் வீடுகளைக் கொளுத்தியதால் அதற்குள் அப்பாவி முஸ்லிம் இளைஞர் ஒருவர் சிக்குண்டு அநியாயமாக உயிரை பறிகொடுத்துள்ளார்.

இந் நாட்டில் முஸ்லிம்கள் செய்த தவறுதான் என்ன? நாட்டின் இறைமைக்காக பாடுபட்டது தவறா? சமாதானம்வரவேண்டுமென நினைத்தது தவறா? நாடு பிளவுபடக்கூடாது என்று எண்ணியது தவறா? தமிழர்களுடனும் சிங்களவர்களுடனும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று நினைப்பது தவறா? ஏன் இந்த சமூகத்தை இவ்வாறு அழிக்கத் துடிக்கின்றார்கள்? முஸ்லிம்களின் சொத்துக்களை நாசமாக்க ஏன் அலைந்து திரிகின்றார்கள் என்று அமைச்சர் பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார். (இ-7)

# இனங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கத் தவறியதே வன்முறைக்கு காரணம்

## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் கடந்த 30 வருட கால யுத்த நிறைவுக்கு பின்னரான இக்காலப்பகுதியானது இனங்களுக்கு இடையில் சந்தேகங்களை அகற்றி, பரஸ்பர நம்பிக்கையினை வளர்க்கின்ற காலகட்டமாக மாற்றப்பட்டிருத்தல் வேண்டும். அதனை செய்வதற்கு தவறிய ஒரு நிலையினையே கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள திகன பகுதியில் ஏற்பட்டுள்ள அசம்பாவித சம்பவங்கள் எடுத்தியம்புகின்றன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள திகன பகுதியில் ஏற்பட்டுள்ள அசம்பாவித சம்பவங்கள்தொடர்பில்நாடாளு மன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

நாட்டில் பொறுப்புக்கூற வேண்டிய அனைத்துத் தரப்பினரும், குறிப்பாக அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமூக மற்றும் மதத் தலைவர்கள் மிகவும் நிதானமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அதே நேரம், அனைத்து இன மக்களும் புரிந்துணர்வுகளோடு சில விட்டுக்கொடுப்புகளுடன் நடந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்படி சம்பவத்திற்கு மூலகாரணமாக கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் காரணமாக எம். ஜி.குமாரசிங்க என்பவர் உயிரிழந்துள்ளார். அன்னாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது மறைவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள அனைவருடனும் எனது துயரங்களையும் பகிர்ந்து கொள்கிறேன். பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் மக்களுக்கும் எனது வேதனையை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் குமாரசிங்கவின் இழப்பு தொடர்பிலும், பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களது சொத்து இழப்புகள் தொடர்பிலும் இந்த அரசு விரைந்து இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பாதுகாப்புத்துறை மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்

## ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டு



(கண்டி)

கண்டி மற்றும் அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத தாக்குதல்களின் போது பாதுகாப்புத்துறை அசமந்தப் போக்குடன் செயற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்புத்துறை மீது வைத்திருந்த நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் தோன்றியுள்ள அசாதாரண நிலை தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சிங்கள சகோதரர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக இனவெறுப்பு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறப் போவதை உளவுத்துறை முன்கூட்டியே அறிந்து, அதனை தடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பௌத்த மதகுருமார்கள், முஸ்லிம்கள் மீதுள்ள தப்பபிப்பிராயங்களை களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

முஸ்லிம்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக வெளியில் பல சிங்கள குழுக்கள் இயங்குகின்றன. அவ்வாறானவர்களே வெளியிலிருந்து வந்து இந்த வன்முறைகளில் ஈடுபட்டனர் என்பதை சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர்களான எஸ்.பி. திஸாநாயக்க, பைசர் முஸ்தபா, லக்ஷ்மன் கிரியெல்ல, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதியமைச்சர் பைசல் காசிம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், லக்கி ஜயவர்தன, இராணுவ உயரதிகாரிகள், பௌத்த மதகுருமார்கள், கண்டியிலுள்ள முக்கியமான மௌலவிமார், கிறிஸ்தவ மதகுருமார், சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# திருகோணமலை அபிவிருத்தி குறித்து அலரி மாளிகையில் கலந்துரையாடல்

## பிரதமர், சம்பந்தன் பங்கேற்பு





(கொழும்பு)

திருகோணமலை மாவட்டம், பட்டணம் மற்றும் பட்டணமும் சூழலும் உள்ளடங்கலான பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் சிங்கப்பூர் நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நிறுவனமான சூர்பன ஜூரோங் பிரதிநிதிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக்காலை அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கலந்து கொண்டு மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் இடம்பெற வேண்டிய மிக முக்கிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் குழுவினருக்கு விளக்கமளித்தார். (இ-7)

# அரசியல் அதிகார மோகம் கொண்ட ஒரு குழுவின் சூழ்ச்சியே வன்முறைகள்

## பிரதமர் ரணில் பாராளுமன்றில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)


அம்பாறை மற்றும் திகன பகுதிகளில் இடம்பெற்ற இனவாத வன்முறை சம்பவங்களை அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கம் என்ற ரீதியில் இவ்வாறான சட்டவிரோத மற்றும் வன்முறை சம்பவங்களை அனுமதிக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த வன்முறைகள் திட்டமிட்ட இனவாத செயற்பாடுகளாகும். அரசியல் அதிகார மோகம் கொண்ட ஒரு குழுவின் சூழ்ச்சியே இதன் பின்னணியில் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அம்பாறை, திகன பகுதியில் இடம்பெற்ற இன வன்முறைகள் தொடர்பிலும் அவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக் கூடாது என்பதை வலியுறுத்தியும் ஜே.வி.பி. தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமாகிய அநுரகுமார திஸாநாயகவினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த இனவாத மற்றும் வன்முறை செயற்பாடுகளை அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கம் என்ற ரீதியில் இவ்வாறான சட்டவிரோத மற்றும் வன்முறை சம்பவங்களை அனுமதிக்க முடியாது. 30 வருடகால கொடூர யுத்தத்தின் இன்னல்களை சந்தித்த நாடு என்ற ரீதியில் சமாதானம், ஒற்றுமை மற்றும் சுதந்திரத்தின் பெறுமதியை நாங்கள் எல்லோரும் நன்கு அறிவோம். அரசியல் அதிகார மோகத்தில் இருக்கும் சில பிரிவினர் மக்களின் ஐக்கியத்தை சீர்குலைக்க பல்வேறு தந்திரங்களையும் பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்டு வருகின்றனர் என்பது தெரிய



வந்துள்ளது.

அவர்களின் ஒரே ஆயுதமாக இனவாதமே இருக்கின்றது. அதன்மூலம் அச்ச நிலைமையை ஏற்படுத்தி மக்களின் சாதாரண வாழ்வை சீர்குலைத்து அதிகாரத்தை கைப்பற்றுவதே அவர்களின் ஒரே நோக்கமாக இருக்கின்றது. இனங்களுக்கிடையே குரோதத்தை ஏற்படுத்தும்வகையில்மக்களை தவறான திசையில் கொண்டு சென்று பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர். குறிப்பாக சமூக வலைத்தளங்களின் ஊடாக திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை பரப்புகின்றனர். இது திட்டமிட்டு செய்யப்படுகின்றது என்பது வெளிப்படையாகியுள்ளது.

குழுவொன்று சமூக வலைத்தளங்களின் ஊடாக திட்டமிட்டு கடந்த மாதம் 9ஆம் திகதி முஸ்லிம் இனத்தால் சிங்கள இனத்திற்கு அச்சுறுத்தல் விடுப்பதாக குறிப்பிடும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக பொய்யான புள்ளி விபரத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில முஸ்லிம் அமைப்புகளும் இதற்கு பதில்களை வழங்கியுள்ளன. நீண்ட காலமாக இந்தக் குழு இனவாதத்தை பரப்பியுள்ளது. இதன்மூலம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இங்கு பெரும்பான்மையானவர்கள் சிங்கள பௌத்தர்களே. சிங்கள பௌத்தர்கள் என்ற ரீதியில் நாங்கள் அந்த உரிமைகளை பாதுகாப்போம். அதற்கு பாதிப்புகள் ஏற்படவில்லை. அச்சுறுத்தலும் கிடையாது. அவ்வாறாக நடக்கவும் நாங்கள் இடமளிக்கமாட்டோம்.

இலங்கையர் என்ற ரீதியில் வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வாழ்கின்றார்கள். சகல மதத்தவர்களும் இடையூறுகள் இன்றி தமது கலாசாரத்தை கடைப்பிடிப்பதற்கும் மதத்தை பின்பற்றுவதற்கும் உரிமைகள் இருக்கின்றன. நாம் இவற்றை பாதுகாப்போம். இந்நிலையில் முஸ்லிம் வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக நாங்கள் கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறான திட்டமிட்ட மற்றும் சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு எதிரான கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

இந்த அமைதியின்மை நிலைமையின் போது மிகவும் பொறுமையாக மற்றும் சிந்தித்து நடந்துகொண்டு நிலைமையை கட்டுப்படுத்த ஒத்துழைத்த பௌத்த குருமார்கள் இஸ்லாமிய தலைவர் அடங்கலாக மதத் தலைவர்களுக்கும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் மற்றைய மக்கள் பிரிவினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.


அதேபோன்று இந்தச் சம்பவத்தின் போது பாதிப்புக்குள்ளான உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்காக துரிதமாக நட்டஈடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கும். இனவாதம் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கும் தேசத் துரோகிகளின் வலையில் சிக்கி விடாது பொறுமையாக, சிந்தித்து செயற்படுமாறு நான் நாட்டின் சகல மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் குற்றவாளிகள் தப்பிக்க ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1350

Search for people, places and things Nagendram Home

### சந்தோஷ்

மாசத்துக்கு ஒருநாள்தான் சம்பளம் தராங்க...



ஆனா... வேலை மட்டும் தினமும் தராங்க...

### சந்தியா

சங்கடங்கள் வரும்போது தடுமாறாதீர்கள்



அதுபோல சந்தர்ப்பங்கள் வரும்போது தடம் மாறாதீர்கள்....!

### சயந்தன்


தன் மகனோ, மகளோ கஷ்டப்படக்கூடாது என்பதற்காக



சாதும்வரை தான் கஷ்டப்பட்டு உழைக்கிறார் அப்பா!

### கமல்

வீட்டின் பூட்டை உடைத்து ரூ.7 இலட்சம் நகை கொள்ளை



பூட்டுக்குள்ள எப்படி அவ்வளவு நகையும் வைக்க முடியும்... ஒரே டவுட்டா இருக்கே...

### ராஜன்

பெண்களிடம் அவர் அப்பாவையும்... ஆண்களிடம் அவர் அம்மாவையும் புகழ்ந்து பேசினால்...



ஒவ்வொரு பந்தும் சிக்ஸர்தான்...

### ராகுலன்

பணத்தைச் சம்பாதிக்க ஆரோக்கியத்தை தியாகம் செய்கின்றோம்...



இழந்த ஆரோக்கியத்தை திரும்பிப் பெற பணத்தை தியாகம் செய்கிறோம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சர்வதேச பெண்கள் தினம்

## பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவை நோக்கி

சர்வதேச பெண்கள் தினம் முதல் முறையாக அமெரிக்காவில் சோசலிசக் கட்சியினால் பெப்ரவரி 28 ஆம் திகதி 1909 இல் கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, டென்மார்க்கில் கோப்பன் ஹேகன் நகரில் நடைபெற்ற சோசலிச மாநாட்டில் சர்வதேச பெண்கள் தினத்தை மார்ச் 8 ஆம் திகதியில் கொண்டாட வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார்கள். இம் மாநாட்டில் பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை உட்பட மற்றும் சகல விடயங்களிலும் பெண்களுக்குச் சமவுரிமை வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டன. 1911 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளான ஒஸ்ரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து நாடுகளில் பெண்களால் மேற்கொண்ட ஊர்வலங்களில் பத்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் பங்கு கொண்டது பெண்களின் உரிமைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்தது. 1914 இல் ஜேர்மனியில் பெண்கள் வாக்குரிமை கோரிக்கையை வலியுறுத்திப் போராடினர். இதுபோல இங்கிலாந்திலும் வாக்குரிமைக்காக பெண்கள் போராடினர். 1917 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி ரஷ்யப் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 20 ஆம் நூற்றாண்டில் பெண்கள் உரிமைக்காக ஐரோப்பிய நாடுகளில் சோசலிஸ்ட்டுகளும் கம்யூனிஸ்ட்டுகளும் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளன.

1975இல் ஐக்கிய நாடுகள் மார்ச் 8 ஆம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்தது. மேலும் 1977 இல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மார்ச் 8 ஆம் திகதியை பெண்கள் உரிமைகள் மற்றும் உலக சமாதானத்திற்குமான தினமாகத் தீர்மானித்தது. சர்வதேச ரீதியில் மெக்சிக்கோ, கோப்பன்ஹேகன், நைரோபி, பீஜிங் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற பெண்கள் மாநாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இனங் காணப்பட்டும் பல்வேறு தீர்வு யோசனைகள், செயற்றிட்டங்கள் முன்மொழியப்பட்டன. மேலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் வாழும் பெண்கள் பிரச்சினைகள், வளரும் நாடுகளில் வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சிறப்பான கவனத்தையீர்த்தன. வளரும் நாடுகளில் வாழும் பெண்களின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவது குறித்து வலியுறுத்தப்பட்டன.

1975 இற்குப் பின்னர் சர்வதேச ரீதியில் நாடுகள் பெண்கள் மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாயின. நாட்டின் அபிவிருத்தியில் பெண்களுக்கு உரிய இடமும் பெண்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படலாயிற்று. பல்வேறு நாடுகளில் முதன் முறையாக பெண்கள் விவகார அமைச்சு, பெண்கள் விவகார அமைச்சர் நியமிக்கப்படலாயிற்று. நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பல்வேறு துறைகளில் பெண்களுக்குரிய இடம் கொடுக்கும் போக்கு படிப்படியாக மேம்படத் தொடங்கியது. நாடுகள் பெண்களின் மேம்பாடு மற்றும் நலன்கள் குறித்து பல செயற்றிட்டங்களை முன்னெடுக்கலாயின. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பம், தனியான தாய் போன்றவற்றுக்கு அரசுகள் பாதுகாப்புக் கொடுக்கலாயின. இதேபோல பெண்களைப் பாதிக்கும் பல்வேறு சட்டங்கள் மற்றும் சமூக நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் முன்னர் பெண் களை நியமனம் செய்யாதிருந்த பல்வேறு துறைகளில் இன்று பெண்கள் நியமிக்கப்படுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் பெண்களுக்கான பால்நிலைக் கல்வி பலநாடுகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் பெண்களுக்கான பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக தமிழ்நாட்டில் கொடைக்கானலில் அமைந்துள்ள அன்னை தெரேசா பெண்கள் பல்கலைக்கழகம் இதற்குச் சிறந்த உதாரணம். மேலும் பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பெண்ணியக் கருத்துக்கள் குறித்தும் (Feminism) பல்கலைக்கழங்களில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன, முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பனவும் குறிப்பிடத்தக்கது.

1996 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வொரு ஆண்டும் பெண்கள் தினத்தை ஒரு கருப்பொருள் அடிப்படையில் கொண்டாடி வருகிறது. 1996 இல் இருந்து 2018 வரையான வருடாந்த பெண்கள் தினக் கருப்பொருள்கள் பின்வருமாறு.

1996-- கடந்த காலத்தைக் கொண்டாடுவதும் எதிர் காலத்திற்கான திட்டமிடலும்

1997-பெண்களும் சமாதான மேசையும்

1998-பெண்களும் மனித வுரிமைகளும்

1999-பெண்களுக்கு எதிரான வன்முறையற்ற சுதந்திர உலகம்

2000-சமாதானத்திற்கான பெண்களின் ஐக்கியம்

2001-பெண்களும் சமாதானமும்- முரண்பாடுகள் முகாமைத்துவம்

2002-இன்றைய ஆப்கானிஸ்தான் பெண்கள்-யதார்த்தங்களும் சந்தர்ப்பங்களும்

2003-பால்நிலை சமத்துவமும் மிலேனிய(Millennium) இலட்சியங்களும்

2004-பெண்களும் எச்.ஐ.வி./ எயிட்ஸ்

2005- 2005 இற்கு அப்பால் பால்நிலை சமத்துவம்- பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்

2006-தீர்மானம் எடுப்பதில் மகளிர்

2007-பெண்களுக்கும் யுவதிகளுக்கும் எதிரான வன்முறை தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையை முடிவுக்குக் கொண்டுவருதல்

2008-பெண்கள், யுவதிகளில் முதலீடு

2009-ஆண்களும் பெண்களும் இணைந்து பெண்கள் யுவதிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருதல்

2010-சம உரிமைகள்- சம சந்தர்ப்பங்களும் யாவரது முன்னேற்றங்களும்

2011- கல்வி, பயிற்சி, விஞ்ஞானம், தொழில் நுட்பத்தை சமமாகப் பெறும் வழியும் பெண்களுக்கான கௌரவ செல்நெறியும்

2012-கிராமியப் பெண்களை வலுவூட்டல் - வறுமையையும் பட்டினியையும் முடிவுக்குக் கொண்டுவருதல்

2013 வாக்குறுதி- வாக்குறுதிதான் பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரும் செயற்பாட்டுக்கான காலம்

2014- பெண்களுக்கான சமத்துவமும் யாவரது மேம்பாடும்

2015-பெண்களை வலுவூட்டுவதும் மானிடத்தின் வலுவூட்டலும்

2016- புவிக்கோளில் 2030 இல் 50-50 பால்நிலை சமத்துவத்தை முன்னெடுத்தலும்

2017-மாறிவரும் தொழில் உலகில் பெண்கள் 2030 இல் 50-50 நிலையைப் பெறுதல்

2018 இதுவே நேரம்- கிராம- நகர செயற்பாடுகள் மூலம் பெண்கள் வாழ்வை பெருமாற்றத்திற்குட்படுத்துவது.

சர்வதேச பெண்கள் தின நிகழ்ச்சி நிரல்களுக்கு அப்பால் சர்வதேச பெண் பிள்ளைகள் தின முன்னெடுப்புக்கள் மூலம் குழந்தை விவாகத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், யுவதிகளின் கல்வியை மேம்படுத்தல் மற்றும் பதின்ம வயது யுவதிகளுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தல் போன்றவற்றிலும் மற்றும் பிரச்சினை களை முக்காலத்திலும் எதிர்கொள்ள வலுவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கன. பெண்பிள்ளைகள் தின செயற்பாடுகளும் பெண்களுக்கு உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நலன்களைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

பெண்கள் தினம் நூறு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இக்கொண்டாட்டம் இன்றும் முக்கியமானதாக இருக்கின்றது. பெண்கள் இதுவரை சமூகப் பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் சட்டத்துறைகளில் நாட்டாரியல் தடைகளுக்கு எதிராக ஈட்டிய வெற்றிகள், சாதனைகளை வலுப்படுத்துவதுடன் இன்னும் பல துறைகளில் காணப்படும் சமமற்ற நிலைகளை நீக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

கடந்த கால கருப் பொருள்களில் அடைந்த வெற்றியுடன் 2018 இல் மாற்றத்துக்கான அழுத்தத்தைக் கடுமையாக கொடுக்கவேண்டியுள்ளது. உலகப் பொருளாதார குழு அறிக்கையின்படி பொருளாதார நிலையில் ஆண்- பெண் சமத்துவ நிலையை அடைய நூற்றாண்டு எடுக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெண்களின் சமத்துவத்திற்கான பூகோள செயலூக்கல் # Me too, # Times up போன்ற அமைப்புக்கள் மேலும் மேலும் பெண்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருகின்றன. ஹொலிவூட்டில் கூட பால்நிலை ஊதிய வேறுபாடு, பாலியல் துன்பங்கள் பற்றி அண்மையில் வந்த செய்திகள் கவலை தருவதாக இருக்கின்றன. தென்னாசிய மக்கள் தொகையில் ஆண்- பெண் விகிதாசாரம் மிகவும் சாதகமற்று இருப்பது பெண்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் காட்டி நிற்கிறது. பெண் சிசுக் கொலை, தெரிந்த பெண் குழந்தைகள் பிறப்பதைத் தவிர்த்தல், கருச்சிதைவு, இன்னும் பெண்கள் தங்களது விருப்பங்களுக்கேற்ப சுயமாக தீர்மானம் எடுக்க முடியாத நிலை இன்னும் தென்னாசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை மற்றும் ஆபிரிக்க நாடுகளில் கூடுதலாகக் காணப்படுகின்றன. பெற்றோரின் விருப்பத்திற்கெதிராக காதல் திருமணம் செய்யும் பெண்கள் கௌரவக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதேபோல் பல நாடுகளில் பெண் கல்வி முழுமையாக கொடுக்கப்படவில்லை என்பதும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் குறைந்ததாகவில்லை.

இதனால் பெண்களின் நிலையை மேம்படுத்த இன்றும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இலங்கையில் பெண்கள் கல்வி, சமூக, பொருளாதார நிலைகளில் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு நல்ல நிலையில் இருப்பினும் அரசியல் துறையில் இவர்களது பங்கும் பணிகளும் குறைவாக இருந்து வந்துள்ளன. இன்று அரசியலில் இருக்கும் பெண்கள் தங்கள் கணவர் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பியுள்ளார்கள் அல்லாமல் தாங்களாக அரசியல் செய்து வளர்ச்சி பெற்றவர்களல்ல. உள்ளூராட்சி சபைகளின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் கட்டாயம் 25 வீதம்



பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

பெண்கள் இருக்கவேண்டுமென்ற சட்டத்தால் இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் பெண்களின் பிரசன்னத்தால் உள்ளூராட்சி சபைகள் வன்முறையற்றும் காத்திரமாகவும் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூராட்சியில் பங்கு கொள்ளும் பெண்கள் காலக்கிரமத்தில் மாகாண சபை கள் மற்றும் பாராளுமன்ற மட்டத்திலும் பங்குகொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எல்லா நாடுகளிலும் பெண்களின் நிலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு இருந்தாலும் இன்றும் பல்வேறு துறைகளில் பெண்கள் மிகவும் பின்னிற்கின்றனர். பால்நிலை சமத்துவத்தையடைய இன்னும் கடுமையாக உழைக்கவேண்டியுள்ளது. ஆண்களும் பெண்களும் ஒரே மாதிரி இருக்க வேண்டுமென்று இல்லை. ஆனால் உரிமைகள், பொறுப்புக்கள், சந்தர்ப்பங்கள் என்ற நிலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இல்லை.

பால்நிலை சமத்துவம் (Gender Equality), ஒப்புரவு (Equity) எனும்போது நீதியாக நடத்துதல் மூலம் இருபாலாரும் தங்களுக்குரிய தேவைகளை பெறுதலில் பிரச்சினைகள் இருக்கக்கூடாது. மேலும் உரிமைகள், பயன்கள், கடமைப்பாடு சந்தர்ப்பங்களில் வேறுபாடுகள் இருப்பினும் சமத்துவப் பண்பும் ஒப்புரவுப் பண்பும் இருப்பின் குறை கூற இடமில்லை.

உலகில் எல்லா நாடுகளிலும் கிராமங்களிலும் நகரங்களிலும் பால்நிலை சமத்துவத்தையும் ஒப்புரவையும் அடைய சர்வதேச நிறுவனங்கள், அரசுகள், சிவில் சமூக அமைப்புக்கள், தனியன்கள் யாவரையும் உள்வாங்கி முழுமையாக, கடினமாக இன்றும் உழைக்க வேண்டியிருக்கின்றது.

மாற்றங்களைத் துரிதமாகக் கொண்டுவந்து பெண்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டியுள்ளது. முழு சமுதாயங்களும் சிந்தித்துச் செயற்பட்டால் குறுகிய காலத்துக்குள் இலக்குகளை அடைய முடியும்.

## அனைத்துலக அளவில் நெருக்கடி ஏற்படும்

# இனவாதம் தூண்டப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் காட்டம்

(கொழும்பு)

சிறுபான்மை மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் அனைத்துலக அளவில் அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர்,

'சட்டத்தை கையிலெடுத்து செயற்படும் நிலைமை ஏற்பட அரசாங்கம் இடமளிக்க கூடாது. நல்லாட்சியில் இனவாதம் தூண்டப்படுவதை ஒருபோதும்பொறுத்துக்கொள்ளவும் முடியாது.



இனவாத செயற்பாடுகளை தடுக்க சட்டம், ஒழுங்கு ஏன் நடைமுறைப்படுத்தப்படவில்லை? அண்மைக் காலமாக இடம்பெறும் இனவாத செயற்பாடுகள் மிகவும் கண்டிக்கத்தக்கவை.

அம்பாறை சம்பவம் தொடர்பில் சந்தேகம் உள்ளது.

பொலிஸ் நிலையம் அருகில் இருந்த போதும், தாக்க வந்தவர்கள் பொலிஸாரின் காதினால் புகுந்து தப்பியுள்ளனர். இதன் பின்னணியில் உள்ள உண்மை நிலையை ஆராய வேண்டும்.

இளைஞர் ஒருவர் மீதான தாக்குதலை அடிப்படையாக வைத்து கண்டியில் வன்முறை இடம்பெற்றுள்ளது. பள்ளிவாசல்கள், வீடுகள் தாக்கப்பட்டன. உடைமைகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

இவற்றை அனுமதிக்க முடியாது. மக்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படவில்லை.

சட்டத்தில் இருந்து தப்புவதற்காக வீடுகளை தீ வைத்து சேதம் விளைவிப்பது மோசமான நிலைமையை ஏற்படுத்தும். சம்பவம் நடந்து முடிந்த பின்னர் நடவடிக்கை எடுப்பதில் பயனில்லை. சட்டத்தை கையிலெடுத்து செயற்பட முடியும் என்று மக்கள் கருதுகின்றனரா?

இந்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது. சகல இனத்தினருக்கும் சம உரிமையுள்ளது. சட்டம் சமமாக செயற்படுத்தப்பட வேண்டும்.

தாம் பெரும்பான்மை இனம் என யாராவது கருதி செயற்படுவார்களானால் அதற்கு இடமளிக்க முடியாது. கண்டியில் மூன்று, நான்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஏன் அவர்களால் செயற்பட முடியவில்லை?

கடந்த காலங்களில் இலங்கையில் இவ்வாறான இனரீதியான அடக்குமுறைகள் இடம்பெற்றன. அத்தகைய நிலையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இப்போது இனவாத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. சட்டம், நீதி எம்மை எதுவும்செய்யாதுஎன்றநிலைப்பாட்டில் இனவாத குழுக்கள் தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவார்கள்.

ஆகவே குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்த பிரச்சினைக்கு முழுமையான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த அரசாங்கம் எதன் அடிப்படையில் சட்டம் ஒழுங்கை கையாள்கின்றது என்ற கேள்வி எம் மத்தியில் எழுகின்றது.

சிலர் தாங்களே உயர்ந்தவர்கள் என நினைத்துக் கொண்டு ஏனையவர்களை அடக்க முனைகிறார்கள். எம்மைவிட பின்னோக்கி இருந்த நாடுகள் அனைத்தும் எம்மை விடவும் அபிவிருத்தி கண்டு நாட்டின் வளர்ச்சியில் முக்கியத்துவம் செலுத்துகின்றன.

நாம் இன்றும் இனவாத செயற்பாடுகளில் மூழ்கி செயற்படுவது தடுக்கப்பட வேண்டும். பிரதமர் இந்த விடயத்தில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (இ-7)

## மெல்சிறிபுர மத்ரஸா மீது கல்வீச்சுத் தாக்குதல்

(கொழும்பு)

குருநாகல் மாவட்டம், கொக்கரல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெல்சிறிபுர பகுதியில் அமைந்துள்ள அரபுக் கல்லூரி (மத்ரஸா) ஒன்றின் மீது அடையாளம் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் இடம் பெற்றுள்ளதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர் இந்த தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர, மாயிலவ பகுதியில் மெல்சிறிபுர - தித்தெனிய வீதியை அண்மித்து அமைந்துள்ள மத்ரஸா மீதே இந்த கல்வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த தாக்குதல் காரணமாக மத்ரஸாவின் கணனி அறைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த அறையின் கண்ணாடிகள் உள்ளிட்டவை நொறுங்கியுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பில் வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேசிரி குணவர்தனவின் உத்தரவுக்கு அமைய குருநாகல் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சம்பிக்க சிறிவர்தனவின் மேற்பார்வையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சமன்பீரத்நாயக்கவின் ஆலோசனைக்கு அமைய கொகரல்ல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாக்குதலை நடத்தியோர் வந்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிளை மையப்படுத்தி தற்போதைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களை விரைவில் கைது செய்ய முடியும் என நம்புவதாகவும் விசாரணைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

## மலசலகூடத்திலிருந்து சிசுவின் சடலம் மீட்பு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட பழைய மலசலகூடத்தினுள் நேற்று புதன்கிழமை காலை அழுகி உருக்குலைந்த நிலையில் சிசு ஒன்றின் உடல் காணப்பட்டது. கறுப்பு துணி ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் சிசு காணப்பட்டுள்ளது.

சிசு இறந்து சுமார் 3 தினங்களுக்கு மேலாக இருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

குறித்த இந்த சிசு ஆணா அல்லது பெண்ணா என இனங்காண முடியாத அளவிற்கு உருக்குலைந்து காணப்படுகிறது.

மலசலகூடத்திற்குள் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையிலேயே அதனை நகரசபை ஊழியர்கள் திறந்து பார்த்த போது இறந்த நிலையில் சிசு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தினுள் புதிய மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டு பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்பட்டதில் இருந்து இந்த மலசலகூடம் பாவனையில் இல்லாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட மலசலகூடத்திற்குள் எவ்வாறு சிசுவின் உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## இலங்கையில் இனவாத வன்முறைக்கு எதிராக ஜப்பானில் ஆர்ப்பாட்டம்



(டோக்கியோ)

டோக்கியோவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை காரியாலயத்திற்கு முன்பாக இலங்கையின் தற்போதைய நிலவரத்தை கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் வாழ் இலங்கையர்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தை நேற்று மேற்கொண்டனர்.




கண்டி மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் முஸ்லிம்களை இலக்கு வைத்து கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்றுவரும் இனவாத வன்முறை காரணமாக நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு பெருமளவிலான பொலிஸார், விஷேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பிற்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கண்டி நிர்வாக மாவட்டத்தில் கால வரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் பல முஸ்லிம் பிரதேசங்களில் பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பவற்றுக்கு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)



பா.இரமணாகரனின் கல் சிறுவர் சிறுகதை நூல் வெளியீட்டு விழா கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஐ.நா. மனிதவுரிமை பேரவையிடம் நிரந்தர தீர்வுகோரி கேப்பாபிலவில் 11ஆம் திகதி மாபெரும் கவனயீர்ப்பு

## ஆதரவு வழங்குமாறு கோருகின்றனர்

(பனிக்கன்குளம்)

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற் கொள்ளவுள்ளதாக கேப்பாபிலவுமக்கள்தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு மக்களின் போராட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நிரந்தரமான தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கேப்பாபிலவில் நாம் முன்னெடுத்துவரும் போராட்டமானது வெறுமனே கேப்பாபிலவு நிலமீட்பு போராட்டமல்ல, இது ஒரு உரிமை சார்ந்த போராட்டம். எனவே வட கிழக்கில் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் அனைத்துமே விடுவிக்க வேண்டியவை. இதனை வலியுறுத்தி மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாகவும் இந்த போராட்டத்துக்கு வட கிழக்கிலுள்ள கட்சி மற்றும் இன, மத பேதங்களை திறந்து அனைத்து அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளனர்.

இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நில மீட்பு போராட்டம் ஒரு வருடத்தை கடந்த நிலையில் 370 ஆவது நாளாக நேற்றும் இராணுவ முகாமிற்கு முன்னால் தொடர்கின்றது.

எனினும் 104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தமக்கான தீர்வினை அரசாங்கம் முன் வைக்காத நிலையில் ஜெனிவாவின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் எதிர் வரும் 11 ஆம் திகதி போராட்டம் ஒன்றை மேற்கொள்ளும் தீர்மானத்தை மேற் கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கேப்பாபிலவு மக்களின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும் வரை தமது போராட்டம்தொடரும்என நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆறுமுகம் வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். (2-281)

# ரயர் எரியூட்டப்பட்ட சம்பவமானது முறுகலை ஏற்படுத்த திட்டமிட்ட நாசகார செயல்

## மதீனாநகர் பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவிப்பு



(குருமன்காடு)

வவுனியா மதீனா நகர் பள்ளிவாசலுக்கு முன்பாக இனந்தெரியாத நபர்களால் ரயர் எரிக்கப்பட்ட சம்பவம் இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்த திட்டமிட்ட நாசகார செயல் என பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மதீனாநகர் பள்ளிவாசல் முன்பாக நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்றினால் ரயர் எரியூட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மதீனா நகர் பள்ளிவாசல் பகுதிக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தனர். இச்சம்பவத்தால் பதற்ற நிலைமை காணப்பட்டது.

டயர் எரிப்பு சம்பவம் தொடர்பாக பள்ளிவாசல் மௌலவி எம்.எச்.எஸ். அலாவுதீன், பிரஜைகள் பொலிஸ் குழு தலைவர் முகமட் பைசல் மற்றும் மதீனா நகர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் யு. அயுப்கான் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில்,

பள்ளிவாசல் முன்பாக ரயர் எரிக்கப்பட்ட நிலைமையானது ஒரு நாசகார செயலாகவே நாங்கள் பார்க்கிறோம். இவ்வாறான வணக்கஸ்தலங்கள் தாக்கப்படுவது இனங்களுக்கிடையிலான முறுகலை ஏற்படுத்தும் நோக்கமே.

இக்கிராமத்தில் யுத்த காலத்தில் கூட தமிழ், முஸ்லிம் இனங்களை சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த ஒற்றுமையை சீர்குலைக்க சில விசமிகள் திட்டமிட்டு இந்த செயலைச் செய்கின்றார்கள்.

இவ்வாறான வேண்டத்தகாத சம்பவங்கள் எதிர்காலத்தில் நடை பெறாமலிருப்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தனர்.(2-250-281)

# மன்னார் வைத்தியசாலை முன்பாக இராணுவம் குவிப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பகுதியில் நேற்று புதன் கிழமை காலை முதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் இராணுவத்தின் கவச வாகனமும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் மக்கள் மத்தியில் சற்று அச்ச நிலை ஏற்பட்டிருந்தது. (2-281)

# வவுனியாவில் சர்வமத தலைவர்களுடன் அரச அதிபர் நேற்று கலந்துரையாடல்

(குருமன்காடு)

வவுனியாவில் சர்வமத தலைவர்கள், முப்படையினர் பொலிஸார் ஆகியோரை அழைத்து அரசாங்க அதிபர் அவசர சந்திப்பொன்றினை மேற்கொண்டார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு அரசாங்க அதிபர் சோமரத்தின விதான பத்திரன தலைமையில் ஆரம்பமான இச் சந்திப்பில் சர்வ மத தலைவர்கள் கலந்து கொண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகளை முழுவதுங்கொண்டு வருவதற்கான ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மதீனாநகர் பள்ளிவாசலுக்கு முன்பாக





இனந்தெரியாதோரால் ரயர் எரிக்கப்பட்ட சம்பவத்தினை அடுத்து அவசரமான இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் வவுனியா மாவட்டத்தில் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என சர்வ மத தலைவர்கள் கருத்து தெரிவித்தனர். இதன் போது பொலிஸ் அதிகாரிகள், இராணுவ, விமானப் படை, கடற்படை உயர் அதிகாரிகள், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# துணுக்காய் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டடம் இவ்வாண்டு அமைக்கப்படும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடம் இவ்வாண்டு அமைக்கப்படுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மிகவும் பழைமைவாய்ந்த சேதமடைந்த நிலையில் காணப்படுகின்ற முல்லைத்தீவு துணுக்காய் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கான கட்டடத்தினை புனரமைக்க வேண்டுமென வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் கமலேஸ்வரன் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாண்டு குறித்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவிற்கு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். (2-315)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 55 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 60 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 20 | 50 | 55 | 80 | 50 |
| தக்காளி | 20 | 20 | 30 | 40 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 45 | 30 | 60 | 70 |
| கரட் | 30 | 100 | 70 | 120 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 40 | 25 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 70 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 140 | 40 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 70 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 | 80 | 90 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 | 160 | 160 |
| பீற்றூட் | 30 | 30 | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 | 100 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 100 | 120 | 65 | 140 | 120 |
| கத்தரிதம்பள்ள | 50 | 30 | 40 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 30 | 70 | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 35-90 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 160 | 130 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 70 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 60 | 30 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 40 | — | 80 | 80 |

# அம்புலன்ஸ் சாரதிகள் பணி பகிஷ்கரிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் அம்புலன்ஸ் சாரதிகள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தினைச் சேர்ந்த சாரதிகள், வட மத்திய மாகாண சுகாதார திணைக்கள சாரதிகளுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை கண்டித்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அநுராதபுரம் மாவட்ட சுகாதார திணைக்களம் சார்ந்த 30 சாரதிகளுக்கு வேறு அரச திணைக்களங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதை தொடர்ந்து இடமாற்றத்தை திரும்பப் பெற கோரியும், அம்புலன்ஸ் மற்றும் சுகாதார திணைக் களம் சார்ந்த வாகனங்களின் சாரதிகளை நிரந்தரமாக சுகாதார சேவைக்குள் உள்வாங்க கோரியும் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் அம்புலன்ஸ் சாரதி களின் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக வவுனியா உட்பட வடக்கு மாகாண சுகாதார திணைக் களத்தை சேர்ந்த 222 சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அநுராதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட சுகாதார திணைக் களத்தை சார்ந்த 11 சங்கங்கள் அம்புலன்ஸ் சாரதிகளின் பணிப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அகில இலங்கை சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அம்புலன்ஸ் சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டாலும் அவசர சேவைகள் வழமைபோல் முன்னெடுக்கப்படும் என வடமாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது. (2-250)

அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே; முன்னையிட்ட தீ தென்னிலங்கையிலே; யானும் இட்ட தீ மூள்க மூள்கவே.
– பட்டினத்தடிகள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர் தாயகம் என்பதன் தாற்பரியம் இப்போது புரிகிறதா?

பெரும்பான்மை இன மக்களுடன் வாழுகின்ற சிறுபான்மை இன மக்கள் எந்த நேரமும் எந்த ஆபத்தையும் சந்திக்கின்ற நிலையிலேயே உள்ளனர் என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

பெரும்பான்மை இன மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தமிழ் மக்க்ள் வாழலாம். ஆனால் தமிழ் மக்கள் வாழுகின்ற இடங்களில் பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்கள் குடியமர்ந்தால் என்ன பிரச்சினை என்ற கேள்வியை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடிக்கடி கேட்டதுண்டு.

இந்தக் கேள்விக்கு தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரம் கட்டமைப்பு என்பவற்றின் தனித்துவம் பற்றி எடுத்துக் கூறப்படுவது வழமை.

இங்குதான் ஓர் உள்ளார்ந்தமான உண்மை உள்ளது.

அதாவது தமிழ் மக்களின் பாதுகாப்பு என்பதே இங்கிருக்கக்கூடிய உள்ளார்ந்த விடயமாகும்.

சிங்கள மக்கள் வாழுகின்ற இடங்களில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழுகின்ற போதிலும் அவர்களின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு என்பது சிங்கள மக்களின் கையிலேயே உள்ளது.

நிலஅதிர்வு, கடல் கொந்தளிப்பு உள்ளிட்ட இயற்கை அனர்த்தம்போல சிங்கள மக்களும் எந்த நேரம் கொதித்தெழுந்தாலும் அதற்குப் பலியாகப் போகின்றவர்கள் சிறுபான்மை மக்கள் என்பதே உண்மை.

இதற்கு கண்டியில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதம் நடத்திவரும் வன்செயல் தக்க சான்றாகும்.

ஆக, பெரும்பான்மையுடன் சேர்ந்து வாழும் சிறுபான்மை மக்களின் வாழ்வை சிங்களத் தரப்புக்களே தீர்மானிக்கின்றன என்பது வெளிப்படையான உண்மையாகும்.

இத்தகைய் ஆபத்தான சூழ்நிலையில்தான், தமது பூர்வீகமான தமிழர் தாயகம் என்பதன் அவசியத்தை தமிழ் மக்கள் வலியுறுத்தி நிற்கின்றனர்.

எனவே தமிழ் மக்கள் வலியுறுத்துகின்ற தமிழர் தாயகம் என்பதற்குள் இருக்கக்கூடிய நியாயத்தை சர்வதேச சமூகம் இனிமேலாவது புரிந்து கொள்ளும் எனலாம்.

எதுஎவ்வாறாயினும் இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் இன வன்செயல்களை அடியோடு நிறுத்துவது தொடர்பில் இலங்கை ஆட்சித் தரப்பு உறுதியாக இருக்க வேண்டும்.

இதனைச் செய்வதற்காக இனவாதம், மத வாதம் பேசும் பௌத்த பிக்குகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பது கட்டாயமானதாகும்.

பௌத்த தர்மத்தைப் பின்பற்றுவதாகக் கூறி பௌத்த துறவிகளானவர்கள் இனக் கலவரங்களைத் தூண்டி மனிதவதை செய்பவர்களாகவும் சொத்துக்களை அழிப்பவர்களாகவும் இருப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

எனவே இனவாதம் பேசுகின்ற பௌத்த துறவிகள் எவராக இருந்தாலும் அத்தகையவர்களின் மதகுரு என்ற அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டு தண்டனைக்குரியவர்களாக ஆக்க வேண்டும்.

அப்போதுதான் இன வன்செயல்கள் அடியோடு அறுந்து போகும்.

# நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

(கொழும்பு)

நேர்முகத் தேர்வுக்கு தோற்றிய 676 தொண்டர் ஆசிரியர்களும் தங்களுக்கான நியமனங்களை எதிர் பார்த்துள்ள நிலையில் அவர்களுக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுகக வேண்டும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற 23/2 நியதிகேள்வி நேரத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றி வருகின்ற சுமார் 1,050 பேருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த வருடம் ஜூலை மாதம் 28,29,30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பொது நூலகக் கட்டடத்தில் மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றதாகவும் நேர்முகப் பரீட்சை இடம்பெற்று சுமார் ஒரு மாதம் கழிந்த நிலையில், அதில் 676 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும், அவர்களில் 'லொக் புக்' தகுதி அடிப்படையில் 182 பேர் தெரிவு செய்யப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படும எனக் கூறப்பட்டதாகவும், எனினும் இதுவரையில் எவருக்குமே நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

மேற்படி தொண்டர் ஆசிரியர்கள் சுமார் நீண்டகால கட்டமாக மிகவும் பாதிப்புற்ற நிலையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருவதுடன், தற்போது வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசியர்களுக்கான வெற்றிடங்கள் பல காணப்படுவதும் தாங்கள் அறிந்த விடயமாகும்.

இத்தகைய நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 676 தொண்டர் ஆசிரியர்களுமே தங்களுக்கான நியமனங்களை எதிர்பார்த்துள்ள நிலையில், கடந்தகால யுத்த நிலைமைகள் காரணமாக ஏற்பட்டிருந்த இடப்பெயர்வுகளால் தங்களுக்குரிய 'லொக்புக்' தகுதிகளை இழந்துள்ள 494 தொண்டர் ஆசிரியர்களின் மாற்றீடு ஆவணங்களை (வரவு பதிவேடு, கருத்தரங்குகளில் கலந்துகொண்ட, பரீட்சைகளில தோற்றிய பதிவுகள், பாடவிதான விடயங்கள் போன்றவற்றினைக் கருத்தில் கொண்டு, மேற்படி 676 தொண்டர் ஆசியர்களுக்கும் நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து உதவமுடியுமா? மேற்படி எனது கேள்விக்கான பதிலையும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் கல்வயமைச்சர் வழங்குவார் என எதிர்பார்க்கின்றேன் என அவா மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸாரின் அசமந்தமே வன்முறைக்குக் காரணம்

## வேலுகுமார் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

கண்டி - திகன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைக்கு அரசாங்கத்தின் அசமந்த செயற்பாடே காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டி - திகன பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும்அந்த அறிக்கையில், இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதில் தமிழ், முஸ்லிம் மக்கள் முன்னின்று செயற்பட்டு இருக்கின்றார்கள். அதன்மூலம் அவர்கள் எதிர் பார்த்தது சகவாழ்வையும், சமாதானத்தையும் ஆகும்.

இன்று இந்த நிலைமை தலைகீழாக மாறி வருகின்றது. திட்டமிட்ட முறையில் சிறுபான்மை மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு இருக்கின்றது.

இன்று முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து இடம பெறும் வன்முறைகள் உடன் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு மற்றும் இன, மத பேதம் பாராது அமுல் படுத்தப்பட வேண்டும்.

கண்டி - திகன பிரதேசத்திலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டு இருக்கின்றன. பல முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் மற்றும் அவர்களது பல மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டு இருக்கின்றன.

சில இடங்களில் உடைமைகள் சூறையாடப்பட்டு இருக்கின்றன. அதனையும் தாண்டி முஸ்லிம் இளைஞர் ஒருவர் சம்பவத்தில் அநியாயமாக கொல்லப்பட்டு இருக்கின்றார். இன்னும் சிலர் காயத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

ஆங்காங்கே சில தமிழ் வர்த்தக நிலையங்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இதனை வன்மையாக நாம் கண்டிக்கின்றோம். அரசாங்கத்தின் அசமந்த செயற்பாடே இந்நிலைமைக்கு காரணம் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டி இருக்கின்றது.

அன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள். இன்று முஸ்லிம் மக்கள் மீது திருப்பப்பட்டுள்ளது. எமக்கு இதன் வருத்தம் என்ன என்று தெரியும். இந்த பாதிப்புகளின்விலை என்ன என்று தெரியும்.

அன்று அரசாங்கமே தமிழ் மக்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. அதன்மூலம் எமது நாடு பாரிய பின்னடைவுக்கு உள்ளானது.

இன்று சில மத வாத மற்றும் இன வாத குழுக்கள் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு செயற்படுகின்றன. பொலிஸ் அதிகாரிகள் சரியாக செயற்படுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளது.


விசேட அதிரடிப்படையினர் கடமையை சரிவர செய்தனரா என்ற கேள்வி எழுகின்றது.

ஏனெனில் வன்முறை இடம்பெற்றது பட்டப்பகலில் ஆகும். எனவே அரசாங்கம் இதனை தொடர அனுமதிக்கக்கூடாது.

இத்தகைய வன்முறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் வன்முறைய்ய துண்டுபவர்களுக்கு எதிராக மிக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இச் சம்பவங்களை அலட்சியமாக நோக்கினால் அதன் விளைவு இன்னும் ஒரு ஆயுத போராட்டத்தின் ஆரம்பமாக அமைந்துவிடக் கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## சத்திய தரிசனம்



### தங்கபஸ்பம் என்றால் என்ன?

❖ பசு மேய்ந்து விட்டு ஓரிடத்தில் அமர்ந்து அசை போடுகிறது, அதேபோல் நாமும் அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு அமைதியாக அவற்றின் பொருளை சிந்தித்து செயல்பட வேண்டும்.

❖ ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதைவிட, ஓர் அரிய செயலைச் செய்தல் நல்லது.

❖ பொருள் இருந்தால் தான் என்றில்லை, உடல் வலிமையாலும், உள்ளத்திலிருந்து வரும் சொற்களாலும் பிறருக்கு உதவலாம்.

❖ "தேன்" என்று சொன்னால் இனிக்காது, அதை உண்ண வேண்டும், "சேவை" என்று சொன்னால் போதாது, செய்ய வேண்டும். செல்வம், அறிவு, ஆற்றல் ஆகிய வற்றை சமுதாயத்திற்கு செலவழிப்பவன் போற்றத்தக் கவன்.

❖ பிறரிடம் உதவி பெறாமல் வாழ்வது, உங்களுக்கு நீங்களே செய்யும் சேவை.

❖ தன்னைக் கல்லால் அடித்தவனுக்கும் மரம் இனிய கனியைத் தருகிறது. நம்மைச் சொல்லால் அடிப்பவருக்கு கனிவான சொற்களைத்தர வேண்டும்.

❖ தன்னம்பிக்கை என்பது தங்க பஸ்பம். அது இருந்தால் மட்டுமே ஆரோக்கியம் என்ற ஆனந்தம் கிட்டும்.

# அலரிமாளிகை முன் திரண்ட முஸ்லிம் இளைஞர்கள்

(கொழும்பு)

கண்டி - தெல்தெனிய மற்றும் திகன பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் முஸலிம் இளைஞர்கள் அலரி மாளிகை முன்பாக நேற்று முன்தினம் திடீர் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்த னர். முகநூல் ஊடாக ஒரு ங்கிணைந்து அலரிமாளிகை நுழைவாயில் அருகே உள்ள கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் அருகே கூடிய அவர்கள், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி முஸ்லம்களின் உயிர், உடைமைகளை பாதுகாக்குமாறு பிரதமருக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக இந்த அமைதி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இரவு 9.15 மணியளவில் குறித்த இடத்தில் கூடிய முஸ்லிம் இளைஞர்கள், முஸ்லிம்களின் உடைமைகளையும் உயிர்களையும் பாதுகாக்குமாறு கோஷம் எழுப்பினர்.

கொழும்பு வாழ் முஸ்லிம் சமூகம் ஐ.தே.கவுக்கு வாக்களித்தது, இது அவர்கள் மேல் உள்ள நம்பிக்கையிலேயே என கோஷமெழுப்பிய இளைஞர்கள், அவ்வாறான நிலையில் முஸ்லிம்களின் உயிரை காக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என கூறி இந்த அமைதி வழி போராட்டத்தை முன்னெடுத்தனர். (இ-7)

# வெறுப்பையும் அருவருப்பையும் வன்முறைகள் ஏற்படுத்தியுள்ளன

## சனத் ஜெயசூரிய கவலை

இலங்கைக்குள் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் வெறுப்பும், அருவருப்பும் ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

சனத் ஜெயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்தார்.


நாட்டிற்குள் நடந்து வரும் வன்முறை சம்பவங்களை முழுமையாக கண்டிப்பதாகவும் இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கை மக்கள் அனைவரும் இந்த சந்தர்ப்பத்தில் புத்திசாலித்தனமாகவும் அனைவருடன் ஐக்கியமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் சனத் ஜெயசூரிய தெரிவித்தார். (இ-7)

# இந்துவின் மைந்தர்களின் பெருஞ்சமர்

## யாழ்.,கொழும்பு இந்து கல்லூரிகள் நாளை பலப்பரீட்சை





### யாழ். இந்துக் கல்லூரி அணி

### கொழும்பு/இந்துக் கல்லூரி அணி

யாழ். இந்துக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரிக் களுக்கிடையிலான துடுப் பாட்ட போட்டியான இந்து வின் மைந்தர்களின் பெருஞ் சமர் நாளை 9 ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல் லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஆரம்பமான இப் போட்டி நாட்டின் சூழ்நிலை காரணமாக இடையில் பல ஆண்டுகள் நடைபெறாது இம்முறை 9 ஆவது முறை யாக நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 3 முறை கொழு ம்பு இந்துக் கல்லூரி அணி யும் 1 முறை யாழ். இந்துவும் வெற்றி பெற்றுள்ளன. 4 முறை போட்டி வெற்றி, தோல்வி இன்றி முடிவுக்கு வந்துள்ளது. எது எப்படியா யினும் இம்முறை போட்டிக் காக மிகக் கடுமையான இரண்டு அணிகளும் பயிற்சி மேற்கொள்வது மட்டுமன்றி திறமையான பல வீரர்களை முழுமையான தயார் நிலை யில் வைத்திருக்கின்றன. எனவே இந்த முறை போட்டி மிக விறுவிறுப்பாக அமை யும் என்பதில் ஐயமில்லை.

இந்த இரு பாடசாலைக ளுக்கிடையிலான பெருஞ்ச மரில் துடுப்பாட்டம் மட்டு மன்றி சொல்லாடல் என்கிற விவாதப் போட்டியும் உதை பந்தாட்ட போட்டியும் நிகழ் வது வழக்கம். இம்முறையும் சொல்லாடல் -2018 விவாதம் நாளை வெள்ளிக்கிழமை 6.31 இற்கு யாழ். இந்துவின் பிரதான அரங்கில் நடைபெற வுள்ளது. தமிழின் முன்னணி பாடசாலைகள் என்பதாலும் அகில இலங்கை ரீதியில் வெற்றி விவாத அணிகள் என்பதாலும் இந்த விவாதம் பலராலும் கவனிக்கப்படுகிறது. மேலும் ஒழுங்கமைப் பாளர்க ளும் சமூக நலன், அரசியல் சார்ந்த தலைப்புகளே விவாத கருப்பொருளாக கொடுப்பத னால்மக்களையும்தமிழ்தலை வர்களையும் சென்றடைந்து இருந்தது. கடந்த முறை நிகழ் ந்த விவாதம் பல தரப்பின ராலும் சமூக வலைத் தளங்க ளிலும் ஊடகங்களிலும் பேசு பொருளாக மாறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

### ஐக்கிய வி.கழகம் சம்பியன் ஆகியது

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கான விளையாட்டு நிகழ் வின் தடகளப் போட்டிகள் கடந்த 25.26 ஆம் திகதி களில் யா/ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற் றது.

இதில் பருத்தித்துறை ஐக் கிய விளையாட்டுக்கழ கம் ஆண்கள், பெண்கள் இரு பிரிவிலும் சம்பியனாகி சாதனை படைத்துள்ளனர். (க)



அகில இலங்கை கிரிக்கெட் சம்மேளனத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி ரூபவாகினி அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக நடத்திக்கொண்டிருக்கும் மாபெரும் மென்பந்தாட்ட கிரிக்கெட் திருவிழாவில் யாழ். மாவட்ட பிரிவிற்கு இடையிலான சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் மற்றும் இரண்டாவது போட்டியில் JAFFNA ROCKERS விளையாட்டுக்கழகத்தினையும் காலிறுதிப் போட்டியில் அராலி ஸ்டேல் விளையாட்டுக்கழகத்தினையும் வெற்றி கொண்டு அரையிறுதிக்கு தெரிவாகி உள்ளது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி. (க)

### வலிகாமம் வடக்கு அணியை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது நல்லூர் பிரதேசசபை

பருத்தித்துறை பிரதேச சபையினால் நடத்தப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களுக் கிடையேயான துடுப்பாட்ட போட்டிகளில் இறுதிப் போட்டி யில் நல்லூர் மற்றும் வலி காமம் வடக்கு பிரதேச சபை அணிகள் கடந்த செவ்வாய்க் கிழமை மோதிக் கொண்டன. போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை அணியினர் ஒன்பது பந்துப் பரிமாற்ற நிறைவில் 63 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய வலிகாமம் வடக்கு பிரதேசசபை அணியினர் ஒன்பது பந்துப் பரிமாற்ற நிறைவில் 48 ஓட்டங்களை பெற்றனர்.

இதன்மூலம் 15 ஓட் டங்கள் வித்தியாசத்தில் நல் லூர் பிரதேச சபை அணி யினர் வெற்றிவாகை சூடி சம்பியனாகினர். (கு)





கற்பகச்சோலை இளைய நட்சத்திர விளையாட்டுக்கழகம் எதிர் பறாளாய் விளையாட்டுக்கழகம் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ மென்பந்து துடுப்பாட்டத்தில் 12 பந்து பரிமாற் றங்களைக் கொண்ட முதல் போட்டியில் 5 விக்கெட் இழப்புக்கு 91 ஓட்டங்களை சிறப்பான துடுப்பாட்டத்தால் பெற்றுக்கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பறாளாய் விளையாட்டுக்கழக அணி 7 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஒரு ஆட்டமிழப்புடன் வெற்றியை தமதாக்கிக்கொண்டனர்.

08 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட இரண்டாவது போட்டியில் பறாளாய் விளையாட்டுக்கழகம் 93/4 ஓட்டங்களை பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இளைய நட்சத்திர விளையாட்டுக்கழக அணி 35 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியைத் தழுவிக்கொண்டனர். (க)





நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நெடுந்தீவு மகா வித்தியாலய மைதா னத்தில் அண்மையில் நடைபெற்றது...

## பாதுகாப்பு அளிக்கும்...

ப்பட்டது. மீண்டும் செப்ரெம்பர் 19ஆம் திகதியும் இந்த விவாதம் பிற்போடப்பட்டது.

பல்வேறு தரப்புகளினதும் எதிர்ப்புகளால் அரசால் பிற்போடப்பட்ட இந்த சட்டவரைவு மீதான விவாதம் நேற்று நடத்தப்பட்டது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் ஐ.நா வின் சர்வதேச பிரகடனத்தில் இலங்கை அரசு 2015 டிசம்பரில் கையெழுத்திட்டது.

அதற்கு அமையவே, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டவரைவு படையினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று கூட்டு எதிரணி எதிர்ப்புத் தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சட்டம் 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதோடு இச் சட்ட வரைபுக்கு எதிராக 16 வாக்குகள் அளிக்கப்பட்டது. (ம)

## கண்டி பூஜாப்பிட்டிய...

திகன, தெல்தெனிய பகுதிகளில் ஏற்பட்ட சம்பவத்துக்கு தொடர்பில்லை என்று பொலிஸார் கூறினர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூஜாப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## கண்டியில் வன்முறை...

வன்முறைக் கும்பலை இராணுவத்தினர் துரத்திச் சென்றுள்ளனர். இதனால் பல்வேறு பகுதிகளிலும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களை அமைதியாக இருக்குமாறு ஒலிபெருக்கி மூலம் முஸ்லிம் தலைவர்கள் கோரி வருகின்றனர்.

**ஊரடங்கு அமுல்**

உடன் அமுலுக்கு வரும் வகையில் கண்டி நிர்வாக மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை மாலை 4 மணி முதல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி வரை ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேலும், பொதுமக்கள் வீட்டினுள் அமைதியான முறையில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**பொலிஸாரின் விடுமுறைகள் ரத்து**

நாட்டில் நிலவிய அசாதாரண நிலையை தொடர்ந்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறைகள் அனைத்தும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ரத்து செய்யப்பட்டுள்ளது. குறித்த அறிவிப்பை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

**காலவரையறையின்றி மூடப்பட்ட பாடசாலைகள்**

கண்டி நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட சகல அரச பாடசாலைகளும் கால வரையறையின்றி மூடப்படுவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

**கண்டிக்கு விரைந்தார் ஜனாதிபதி**

மைத்திரிபால சிறிசேன கண்டிக்கு விரைந்து சென்றுள்ளார். அவர் அமைதியை ஏற்படுத்துவது குறித்து மதத்தலைவர்கள், ஆயுதப்படையினருடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

**மாத்தளையிலும் பதற்றம்**

மாத்தளை, அம்பதென்ன பகுதியில் வன்முறை சம்பவங்கள் வெடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அந்தப் பகுதியில் உள்ள கடைகள் உடைக்கப்பட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. கடைகளில் வேலை செய்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சிலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக கண்டி நிர்வாக எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் இனவாத மோதல்கள் ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது மாத்தளை வரை அது தீவிரமடைந்துள்ளது. அந்தப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பாடசாலைகளை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறை காரணமாக 8 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி நிர்வாக மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் பலர் அதனை கண்டுகொள்ளாமல் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸ், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கட்டுகஸ்தொட்ட, அம்பதென்ன, செனரத்கம, மடவல, அலதெனிய, உல்லதுபிட்டிய, மெனிக்ஹின்ன, பூஜாபிட்டிய ஆகிய பிரதேசங்களில் இந்த மோதல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தென்னகும்பர மற்றும் மெனிக்கின்ன ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்க முயன்றவர்களை பொலிஸார் கலைத்திருக்கிறார்கள். துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை கண்டி மாவட்டத்துக்கு வெளியே பூகொடை என்ற இடத்தில் முஸ்லிம்களின் சில கடைகள் எரிந்ததாக கூறப்படுகின்ற போதிலும் அது விபத்தா அல்லது வன்செயலா என்று இன்னமும் உறுதி செய்யப்படவில்லை.

அதேவேளை புதிய அவசர நிலையின் கீழ் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு 20 வருடம் முதல் ஆயுட்சிறை வரை வழங்கப்படலாம் என்று பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களும் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அரசியல் கட்சிகள் கண்டனம**

இதற்கிடையே அவசர நிலை அமல்படுத்தப்பட்டதை பல அரசியல் தலைவர்களும் கண்டித்துள்ளனர்.

உரிமைகளுக்காக ஏங்கிக் கிடக்கும் மக்களை ஒடுக்கவே அரசாங்கம் அவசரநிலையை கொண்டுவந்ததாக ஜே.வி.பி கட்சி கண்டித்துள்ளது. தற்போதுள்ள சட்டங்களைக் கொண்டே சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியிருக்க முடியும் என்று அந்தக் கட்சியை சேர்ந்த அநுர குமார திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

உரிய நேரத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்திருக்கலாம் என்று பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

**சுற்றுலாத் துறை**

இலங்கையை பொறுத்தவரை மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்டம் ஒரு பிரபல சுற்றுலாத்தலமாகும். இலங்கையின் இரண்டாவது பெரிய நகரும் கண்டியே. புத்தரின் புனித தந்தம் இருக்கும் தலதா மாளிகை உட்பட பல சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அங்கு இருக்கின்றன. இந்தக் கலவரங்களை அடுத்து, அங்கு சுற்றுலாத்துறை குறித்த கவலைகள் எழுந்துள்ளன. ஊரடங்கு சட்டம் காரணமாக அந்தப் பகுதிக்கு பயணிப்பது குறித்த அச்சங்களும் காணப்படுகின்றன.

அவசரநிலைப் பிரகடனம் இலங்கையின் சுற்றுலாத்துறையில் உடனடியான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று கூறியுள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஏற்படும் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்று நடவடிக்கைகளை தாம் திட்டமிடுவதாகவும் கூறியுள்ளது. (ம)

## யாழ்.இந்தியத் துணைத்...

யப்பட்டுள்ள எஸ்.பாலச்சந்திரன் தெலுங்கராக இருந்தாலும் சரளமாக தமிழ் பேசக் கூடியவர். இவர் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்பு சீனாவின் ஷங்காய் மாநிலத்தின் இராஜதந்திர அதிகாரியாக கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-9)

## அரசியல் சார்ந்த...

ர்பில் பாதுகாப்புத்துறை முழுமையாக விசாரணை நடத்தி ஆதாரங்களைத் திரட்டி வருகின்றது. விரைவில் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற அரசியல் சார்ந்த அந்த சூத்திரதாரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

நாட்டின் அரசியலமைப்பின் ஊடாக சகல பிரஜைகளினதும் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. அதனை யாரும் மீறமுடியாது.

அந்தவகையில் பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியமாகும். இந்த அரசியல் சதியின் பின்னணியில் இருப்பவர்கள் தொடர்பான தகவல்களை விரைவில் வெளியிடுவோம் என்றும் அரசாங்கம் குறிப்பிட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய அசாதாரண சூழல் தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சரத் அமுனுகம, மற்றும் கபிர் ஹசீம் ஆகியோர் இந்த விடயங்களை அறிவித்தனர்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர் சரத் அமுனுகம குறிப்பிடுகையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அசம்பாவிதங்களுக்கு மத்தியில் அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் பொதுமக்களும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதை காண முடிகின்றது. அனைத்துத்தரப்பினரும் இனவாதத்தை நிராகரிக்கின்றனர். நாட்டில் அரசியலமைப்பே பிரதான சட்டமாக இருக்கின்றது. அந்த அரசியலமைப்பு சட்டத்தை யாம் மீற முடியாது. மக்களின் உயிர்களுக்கோ, சொத்துக்களுக்கோ யாரும் சேதம் ஏற்படுத்த முடியாது. அவற்றைப் பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் உள்ளது. எனவே அரசியலமைப்பு ரீதியாக நாட்டை கொண்டுசெல்ல வேண்டும்.

அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு பாதுகாப்புத் தரப்பிற்கும் இருக்கின்றது. ஒருபோதும் இனவாத செயற்பாடுகளை ஊக்குவிக்கக்கூடாது.

வெளிமாவட்டங்களிலிருந்து வந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களைக்கொண்ட சதிகாரர்கள் ஆத்திரமூட்டும் வகையில் செயல்பட்டு அப்பிரதேசத்தில் மோதல் நிலையை ஏற்படுத்தினர். திட்டமிட்டு இந்த அரசியல்சதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதுகாப்பு தரப்பினர் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களை கைது செய்தனர். இருந்தாலும் இந்த அரசியல் சதிகாரர்கள் சதித்திட்டத்தை முன்னெடுத்தனர். இதில் அரசியல் ஆதரவாளர்கள், ஓய்வுபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள், தற்போது பாதுகாப்பு சேவையில் இருக்கின்ற ஒருவர் என பலர் நிரூபணமாகியிருக்கின்றனர். திட்டமிடப்பட்டு இந்த சதி அரங்கேற்றப்பட்டுள்ளது. இங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டுமக்களுக்கு அறிவிப்புக்களை விடுத்துள்ளனர்.

இந்த சதித்திட்டங்கள் எவ்வாறு அரங்கேற்றப்பட்டன என்று மக்களுக்கும் தெரியும். சமூக வலைத்தளங்கள் ஊடாக இவ்வாறு இனவாதங்களை பரப்பி வருகின்றனர். விசாரணை துரிதகதியில் முன்னெடுக்கப்படுகின்றது. விரைவில் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் கொண்டுவருவோம். நிலைமையை கட்டுப்படுத்த அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்துள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அவசரகால நிலையின் கீழ் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பிரச்சினையை நீடிக்க இடமளிக்கமாட்டோம். சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவோம். மக்களின் உரிமையை அரசாங்கம் பாதுகாக்கும். கண்டியில் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் சிறந்த உறவு காணப்படுகின்றது. வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்களே துரோகிகள். ஒருசிலர் தவறு செய்கின்றனர் என்பதற்காக ஒரு சமூகத்தை குறை கூறுவது சரியல்ல. இது தொடர்பில் மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும் என்றார். (ம)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறஉள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இருதய சத்திரசிகிச்சை நிபுணர் ரவிபெருமாள்பிள்ளை, சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், கௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## மரண அறிவித்தல்



### Dr. கந்தசாமி அரவிந்தன்

**(பிராந்திய வைத்திய அதிகாரி - AMC மன்னார்)**

கரணவாய் வடக்கு, கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. கந்தசாமி அரவிந்தன் (பிராந்திய வைத்திய அதிகாரி AMC மன்னார்) நேற்று (07.03.2018) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வுநிலை பதிவாளர்) - இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் Dr. கனகரட்ணம் (பிரதேச வைத்தியசாலை VVT), திருமதி தவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் யசோதாவின் அன்புக் கணவரும் கார்த்திகேயன், கீர்த்தனன், வேணுகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. உமாசங்கர் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), இந்திராஜ் (Advance Developers Pvt. Ltd) Dr. பிருந்திகா (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் சகோதரரும் பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), Dr. சத்தியமூர்த்தி (மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு), ஜெயதீபன் (பிரான்ஸ்), மற்றும் Dr. நிருபா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தேவகி (ஆசிரியர் - யா/விக்னேஸ்வரா கல்லூரி), Dr.செந்தூரன் (MOH, பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2018) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1821)

நாகப்பா வளவு,
வல்வெட்டித்துறை.

தகவல்:- Dr.இ.கனகரட்ணம் (மாமனார்)
தொ.பே.: 021 226 2407, 077 028 3122

## வட்டுக்கோட்டை...

கஞ்சாவை கடத்த முற்பட்ட இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை பகுதியில் கஞ்சா கடத்துவதாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை பொலிஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

பண்ணாகம் சுழிபுரம் வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற இருவரை பொலிஸார் சோதனை செய்ததுடன் அவர்களிடம் இருந்து 75 கிலோ கேரள கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர். 32 சிறிய பொதிகளில் மேற்குறித்த கஞ்சா பொதிசெய்யப்பட்டு விற்பனை செய்யும் நோக்குடன் எடுத்துச் செல்லப்பட்ட போதே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 55 மற்றும் 52 வயதுடைய இரு நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த 2 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-4-9)

## மலசலகூடத்திலிரு...

சென்ற நகரசபை ஊழியர்கள் அந்த மலசலகூடத்தை திறந்து பார்த்த போது மேற்குறித்த சிசுவின் சடலம் இருப்பதை அவதானித்துள்ளனர்.

குறித்த சிசுவின் உடல் கறுப்பு துணி ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், முற்றுமுழுதாக உருக்குலைந்த நிலையில் காணப்பட்டுள்ளது. குறித்த சிசு 3 தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் பூட்டப்பட்டிருந்த மலசலகூடத்திற்குள் எவ்வாறு சிசுவின் உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## கிளிநொச்சியில்...

தமிழர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது.

கிளிநொச்சி செல்வாநகரில் வசித்து பின்னர் அமெரிக்க குடியுரிமை பெற்று அமெரிக்காவில் வசித்து வந்த இரத்தினம் துரைசிங்கம் என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் செல்வாநகரில் உள்ள தனது வீட்டையும், காணியையும் அடிக்கடி பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வந்து செல்வதாகவும், இவரின் குடும்பத்தினர் கனடா நாட்டில் வாழ்ந்து வருவதாகவும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

தற்போது, இவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-15-281-312)

## கட்டுப்பாட்டை இழ...

குள்ளானதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்ததாக முழங்காவில் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவர் பய்ணித்த வாகனமே விபத்துக்குள்ளானதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்,

இச்சம்பவத்தின் போது, மன்னார் வைத்தியசாலையில் கடமையாற்றும் யாழ்ப்பாணம் கரவெட்டிப் பகுதியை சேர்ந்த எஸ். அரவிந்தன (வயது41) எனும் வைத்தியரே விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற முழங்காவில் பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக முழங்காவில் வைத்தியசாலையில் ஒப்படைத் துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-9-15-281-312)

## இனங்களுக்கிடை...

அலுவலகத்தினால் நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவிவரும் இனங்களுக்கிடையிலான வன்முறைகள் குறித்து கவலை அடைவதாகவும் ஐ.நா வின் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பதற்றங்களை தடுப்பதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் உறுதிபாட்டை வரவேற்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேச்சுவார்த்தை மூலம் மக்களிடையிலான வேறுபாட்டை தீர்ப்பதற்கு ஐ.நா. அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. (ம)

## உட...

பொதியொன்றில் போடப்பட்டிருந்த நிலையிலேயே இந்த தலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550*/=Kg
கனடா – 1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-1727)



அறிமுகம் – Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800



45,000 – ஒரு இலட்சம்
வரை வருமானம் + OT + கமிஷன் உடன்
200க்கு மேற்பட்ட
டுபாய் | சுப்பர் மார்க்கட் வேலைவாய்ப்பு
விற்பனை ஊக்குவிப்பாளர் (Merchandisers)
காட்சிப்படுத்தல் உதவியாளர் (Shelf Stockers)
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆண்/பெண்
தொழிலாளர்கள் (Labourers)
இலவசம் – அதிதுரித வர்த்தக - சந்தைப்படுத்தல் சான்றிதழ்தர பயிற்சி
குறிப்பு | கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் அறவிடப்படும்
சுப்பர் மார்க்கட்டுகளில் பணியாற்றுவோர் / அனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை
விபரங்களுக்கு 0777 324 004
TGL Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
221 – 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11



FLC FRENCH LANGUAGE CENTRE
FRENCH வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
Diploma Classes : DELF A1, A2, B1, B2.
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 10..03.18 சனி காலை 10மணி.
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :12.03.18 மாலை 3.30மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.



வேலையாட்கள் தேவை
Fancy Houseல் வேலை செய்வதற்கு முன்அனுபவம் உள்ள பெண் வேலையாட்கள் தேவை. கணனியில் கணக்கு பார்க்க தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். தங்குமிட வசதியும் உண்டு.
இடம் : அச்செழு நீர்வேலி
0772742593, 0767250320
(C-1811)



முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு
யமஹா வழங்கும் மாபெரும் வாகன சந்தை 2018
எவ்வகையான உங்கள் பழைய மோட்டார் சைக்கிளையும் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு உரிமையாளர் ஆகுங்கள்.
பழையதை கொடுத்து புதியதை எடுத்து செல்லுங்கள்





முல்லைத்தீவு கச்சேரிக்கு முன்பாக
மார்ச் 09,10,11
077 779 5800
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.





எம்மிடம் லீசிங் மூலம் பெற்றுக் கொள்பவர்களுக்கு 15 லீற்றர் பெற்றோல், SLS ஹெல்மற்–01 இலவசம்
Digital Electronics
Main Street,
Mullaitivu.
077 662 3824
(சி-1816)



A/L பொருளியல் 2
இரு அலகுகள் உள்ளடங்கிய புதிய பாடத்திட்ட நூல்
A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும் A/L 2017 பரீட்சையில் 100 புள்ளிகளும் பெற வைத்த நூல்களின்
புள்ளிகள் 100 100
விலை: ரூபாய் 300/-
ஆசிரியர்
வே.கருணாகரன்
2018 A/L பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும் விற்பனையாகின்றன.
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(3142)



வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA) பரீட்சைக்கான தயார்படுத்தல் வகுப்பு
ஆரம்பம் 10.03.2018 (வார இறுதி வகுப்பு)
பிரிவு: I - 9.00am
பிரிவு: II - 4.00pm
வகுப்பு கட்டணம் 250/=
விரைவில்... வட மாகாண சாரதி தெரிவு, முன்பள்ளி ஆசிரியர் வகுப்புகள்
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 320 2787, 077 843 5224
(3160)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.